# உதயன்

விலை ரூபா 7.00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 12 புதன்கிழமை (26-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 120


## யாழ்.கோட்டைப் பிரதேசத்தை உள்ளடக்கி

# பெரும் இராணுவத் தளம் ஒன்றை நகரின் கரையோரம் நிறுவ முயற்சி

## எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்க பொது அமைப்புக்கள் ஆயத்தமாகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச்26

**யாழ்.நகரில் கோட்டை மற்றும் முற்றவெளி பிரதேசத்தை உள்ளடக்கி - நகரின் கரையோரம் - பெரும் இராணுவத்தளம் ஒன்றை நிறுவுவதற்கு படைத்தரப்பு திட்டமிட்டு வருவதாகப் பொதுஅமைப்புகள் குற்றஞ்சாட்டி இருக்கின்றன.**

**நகரின் பெரும் பிரதேசத்தை கபளீகரம் செய்யும் இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்காக எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவதற்கு அவை ஆயத்தமாகி வருகின்றன.**

நகரின் சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் விடுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் தற்சமயம் அமைந்திருக்கும் படைமுகாமை இடம்மாற்றி புதிய இடத்தில நிறுவுவது என்ற பெயரில் நகரில் பிறிதொரு பெரும் பிரதேசத்தில் படைத்தளம் ஒன்றை நிரந்தரமாக நிறுவுவதற்கு மறைமுகமாக ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான அலுவலக வளாகம், நகர மண்டபம், சுப்பிரமணியம் பூங்கா, தனியாருக்குச் சொந்தமான வாடிவீடுகள், யாழ்.கோட்டை, முற்றவெளி அடங்கலாக நகரின் கரையோரம் கடற்கரை வீதி வரை அரசு, தனியார் காணிகளை சுவீகரித்து இந்தப் படைமுகாமை அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுவதாக நாங்கள் சந்தேகிக்கின்றோம் என்று பொதுஅமைப்புகளின பிரதி

(14ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்கா தலைமையிலான படைகளின் பக்தாத் நோக்கிய முன்னேற்றத்தை கடும் புழுதிப் புயல் தடுத்து நிறுத்தியிருக்கின்றது. சுழன்றடிக்கும் புழுதிப் புயல் தமது படைகளின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தியிருப்பதாக அமெரிக்க கூட்டுப்படைத் தளகர்த்தர் ரிச்சார்ட் மேயர் ஒப்புக்கொண்டுள்ளார்.

புழுதி படிந்த தனது கண்களைத் துடைக்கின்ற அமெரிக்கச் சிப்பாய் ஒருவரையே படத்தில் காண்கிறீர்கள்.

## தலையிட்டுத் தடுக்குமாறு பிரதமருக்கு மாவை கடிதம்

கொழும்பு,மார்ச்26

யாழ்.மாநகரசபைக் கட்டடம் அமையவிருக்கும் பகுதியில் இராணுவத்தளம் ஒன்றை அமைக்க எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாகத் தமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

முகாம் அமைக்கும் நடவடிக்கையை உடனடியாகத் தலையிட்டு நிறுத்தும்படி அவர் பிரதமரைக் கோரியிருக்கின்றார்.

உன்னத வேலைப்பாடுகளுடன் மாளிகை போன்று அந்த இடத்தில் அமைந்திருந்த யாழ்.மாநகரசபைக் கட்டடம் இனப்பிரச்சினை காரணமான கொடூர யுத்தத்தின் போது ஷெல் வீச்சு

(14ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில்

## வாக்காளர்களை வாக்களிக்கவிடாமல் தடுத்தமை மனித உரிமை மீறிய செயல்

### உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளிப்பு

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிலுள்ள சுமார் 55ஆயிரம் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் மறுத்தமை, வாக்காளர்களின் மனித உரிமையை மீறிய செயல். ஆகவே, மனுதாரர், மூவருக்கும் நஷ்டஈடாக ஒரு லட்சம் ரூபாவை அரசு வழங்கவேண்டும். வழக்கின் மூன்றாம் எதிரியான இராணுவத்தளபதி, ஜெனரல் பலகல்ல மனுதாரர் மூவருக்கும் தனது - சொந்தப்பணத்தில் - தலா முப்பதாயிரம் ரூபா வழங்க வேண்டும்.

- இவ்வாறு உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்திருக்கிறது.

கடந்த பொதுத்தேர்தலில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிலுள்ள தம்மை வாக்களிக்க அனுமதிக்காததை எதிர்த்து வாகரையைச சேர்ந்த சோதிலிங்கம் நவநீதன், தம்பிப்பிள்ளை தங்கவேலு, கணபதிப்பிள்ளை, தங்கராஜா ஆகியோர் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

மனுவில், மட்டக்களப்பில் உள்ள வாகரைவாழ் மக்களை கடந்த பொதுத்தேர்தலின்போது வாக்களிக்க விடாமல் இராணுவத்தினர் பாதைகளில் தடைகள் போட்டுத் தடுத்தனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

உயர் நீதிமன்ற உயர் நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, சி.வி.விக்கினேஸ்வரன், அமீர் ஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதியரசர் மார்க் பெர்னாண்டோ, தமது தீர்ப்பில் தெரிவித்ததாவது:- தேர்தல் என்பது ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள நிலையைப் பிரதிபலிக்கும் நிகழ்வு. அதனைப்பேணிக்காப்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும், அரசினதும் கடமை. தவறுகளுக்கு நீதியின் மூலம் தீர்வுகாணவேண்டும். அடிப்படை மனித உரிமையை மீறு

(14ஆம் பக்கம் பார்க்க)

### பலாலி - கொழும்பு சேவையில் நேற்று

## அளவுக்கதிகமானோருக்கு ரிக்கெட்; விமானப் பயணிகள் பெரும் குழப்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்26

உரிய எண்ணிக்கைக்கு அதிகமான பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்கியதால் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக நேற்று மாலை பலாலிக்கும் இரதமலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இருமணிநேரம் தாமதமாயிற்று.

நேற்று மாலை 5 மணிக்கு பலாலியில் இருந்து புறப்படவேண்டிய பயணிகளுக்கும் பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டன. மேலதிக இடமிருந்ததால் அதற்காக காத்திருந்த நான்கு பேருக்கும் புதிதாகப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டதை அடுத்து விமானத்தில் ஏறுவதற்கான அனுமதி அட்டை (Boarding Pass) அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

பயணிகள் அனைவரும் விமானத்தில் ஏறினர். அப்போது - மாலை 4.45 மணியளவில் - வாகனத்தில் அமைச்சர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் மாநாட்டுக்கு அமைச்சர் வரவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்26

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா நேற்றுப்பிற்பகல் ஏற்பாடுசெய்த செய்தியாளர் மாநாட்டுக்கு சென்ற பத்திரிகையாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பொது நூலகத்தில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளார் என்று அவரது உதவியாளர் ஒருவர் நேரடியாக பத்திரிகை அலுவலகங்களுக்குச சென்று தகவல் கொடுத்தார். அதன்

(14ஆம் பக்கம் பார்க்க)



முன்னேறி வரும் எதிர்ப்படைகளை எதிர்கொள்வதற்கு துப்பாக்கிகளோடு தயாராக நிற்கும் பக்தாத் பெண்களை படத்தில் காண்கிறீர்கள்.

## அமைதிப் பேச்சுக்களால் நிரந்தரத் தீர்வு கிட்டும்

### அமெரிக்கா திடமான நம்பிக்கை

வாஷிங்ரன், மார்ச்26

விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் முன்னெடுத்துச் செல்லும் அமைதிப் பேச்சுக்கள் இலங்கையில் நிரந்தரமானதோர் அரசியல் தீர்வையும் சமாதானத்தையும் கொண்டு வரும் என்று அமெரிக்கா திடமாக நம்புகின்றது.

அமெரிக்க வெளிவிவகார பிரதிச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கும் அமைப்புக்களுக்குமிடையில் ஒரு விசேட கருத்தரங்கு ஏப்ரல் 14 ஆம் திகதி வாஷிங்டனில் நடத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தம்மைச் சந்தித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரிடமே அவர் இதனைத் தெரிவித்தார் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சீன நாட்டு மீனவர்களின் சடலங்கள் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்26

சீன நாட்டு றோலர் படகு முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த வாரம் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த 7 சீன மீனவர்களின் சடலங்களும் அவர்களது உறவினர்களிடம் கையளிப்பதற்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் நான்கு சீன மீனவர்களின் சடலங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கற்கோவளம் கடற்கரையிலும் மேலும மூன்று சீன மீனவர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் குடத்தனைக் கடற்கரையிலும் கரை ஒதுங்கின.

இந்தச் சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டி

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள்:

# கேணல் கருணா - அமைச்சர் ஹக்கீம் நாளை வவுணதீவில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,மார்ச்26

கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணாவை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு நாளை காலை 10 மணிக்கு சந்தித்து பேச்சு நடத்தும்.

வவுணதீவில் நடத்தப்படவுள்ள இப்பேச்சை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்துள்ளது.

ஜப்பானில் கடந்த வாரம் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாணத் தளபதி கருணாவுடன் பேச்சு நடத்தி தீர்வு காணும்படி புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அமைச்சர் ரவூப் ஹக்கீமைக் கேட்டுக் கொண்டது தெரிந்ததே. (ம)

## 60 பணிப் பெண்கள் சவூதியிலிருந்து திரும்பினர்

சவூதி அரேபியாவில் பல இன்னல்களுக்கு உள்ளாகிய வீட்டுப் பணிப் பெண்களான 60 இலங்கைப் பெண்கள் நேற்று நாடு திரும்பினர். சவூதியில் இருக்கையில் பாதிக்கப்பட்ட இப்பெண்கள் தொழில் செய்த இடங்களைவிட்டு வெளியேறி சவூதியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் புகலிடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் அனைவரும் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகளினால் அப்பெண்கள் அவர்களது ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ)

# குவைத் விமான சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,மார்ச்26

ஈராக் போர் காரணமாக இடைநிறுத்தப்பட்ட குவைத்துக்கான விமான சேவையை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் இன்று மீண்டும் ஆரம்பிக்கும்.

ஈராக் போர் தொடர்ந்தாலும் குவைத்தில் தற்பொழுது சுமுகநிலை நிலவுவதால் இச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக நிறுவனத்தின் உயர் அதிகாரி ஜி.ரி.ஜெயசீலன் தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், வளைகுடா பிராந்தியத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப குவைத் விமானச் சேவையிலும் மாற்றம் ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யூ.எல்.227 விமானம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு துபாய்க்குப் புறப்படும். துபாயிலிருந்து பிற்பகல் 4.15 மணிக்குப் புறப்படும் அந்த விமானம் குவைத்தை மாலை 5 மணிக்குச் சென்றடையும். (ம)

### ஈராக் போரினால் பாதிக்கப்படும்

# இலங்கைத் தொழிலாளருக்கு உதவ மேலும் 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு,மார்ச்26

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு அவசரமாக உதவும் நடவடிக்கைகளுக்காக மேலும் 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் பணிபுரிபவர்களின் உறவினர்கள் உடனுக்குடன் விவரங்களைப் பெறுவதற்கென வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் இரவு - பகல் தகவல் நிலையம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. எனவே, அந்நாடுகளில் பணிபுரிபவர்கள் தொடர்பாக எந்த அச்சமும் கொள்ளவேண்டியதில்லை என்று தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஈராக் போர் காரணமாக பாதிக்கப்படும் இலங்கைத் தொழிலாளருக்கு உதவும் முன்னேற்பாடுகளுக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது நிதியில் இருந்து ஏற்கனவே ஐந்து கோடி ரூபாவை வழங்கியுள்ளார். தற்பொழுது தொழில் அமைச்சின் பணிப்பின் பேரில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் பத்து கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

கடந்த காலங்களில் குவைத் யுத்தத்தின் போது ஏற்பட்ட விபரீதங்களை முன்அனுபவமாகக் கொண்டே இந்த முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமது உறவினர்களின் விவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கு- வசதியாக கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் 24 மணி நேரமும் செயற்படும் மத்திய நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நிலையத்தின் 01 - 588211, 01 - 592353 ஆகிய இரு தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும். (ம)

# நெதர்லாந்துக் குழு நேற்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்26

இலங்கைக்கான நெதர்லாந்து பிரதித்தூதுவர் தலைமையிலான குழு, நேற்று குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டு யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்ந்தது.

இலங்கைக்கான நெதர்லாந்துப் பிரதித் தூதுவர் ஹரி ஜே.ஜே.வண்டிக், நெதர்லாந்துத் தூதரக முதலாவது செயலாளர் ரொனிக் றோகேல் ஆகிய இருவருமே நேற்று குடாநாட்டிற்கு உத்தியோகப்பற்றற்ற விஜயம் மேற்கொண்டு வருகை தந்தனர்.

இவர்கள் நெதர்லாந்து அரசினால யாழ்.குடநாட்டில் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் பயன்பாடு தொடர்பாக யாழ்.செயலகத்தில் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல், செயலகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, தலைமையகப் பிரதேச செயலர் எஸ்.வீரபத்திரப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளும் செயற்பாடுகள், இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கல், யாழ்.குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை, வீடமைப்புத் திட்டம், குடிதண்ணீர் வழங்கும் திட்டம உட்பட்ட பல்வேறு விடயங்கள் பற்றி நெதர்லாந்துக் குழுவினர் கேட்டு அறிந்து கொண்டனர்.

அது மட்டுமல்லாது யாழ்.குடாநாட்டில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் பற்றியும் ஆராய்ந்தனர். (ஒ-5)

### ஊர்காவற்றுறை படுகொலைச் சம்பவம்:

# கொலையுண்ட கர்ப்பிணியின் கணவனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்26

ஊர்காவற்றுறையில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொடூரமான முறையில் கோடரியால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பெண்ணின் கணவனை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டிருக்கிறார்.

ஊர்காவற்றுறை மேற்கு வீதியில் வசித்துவந்த 6 பிள்ளைகளின் தாயாரான ம.செம்பத்சோதி என்ற கர்ப்பிணிப் பெண் கடந்த ஞாயிறு இரவு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அப்பெண்ணின் கணவனை ஊர்காவற்றுறை பொலீஸார் நீதிவான் முன் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இக்கொலை தொடர்பான மரண விசாரணை நாளை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இடம்பெறவிருக்கின்றது. (ஐ-3)

# யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வாங்க ரூபா 1 கோடி

## நெதர்லாந்து அரசு வழங்கியது

யாழ்ப்பாணம்,மார்ச்26

யாழ்.குடாநாட்டிலுள்ள 34 பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்யவென நெதர்லாந்து அரசு சுமார் ஒரு கோடி ரூபா நிதியினை யாழ்மாவட்ட 'நிக்கொட்' அமைப்புகளுக்கு வழங்கியுள்ளது.

இதில் யாழ்.வலயத்திற்குட்பட்ட 19 பாடசாலைகளுக்கு 30 லட்சம் ரூபாவும், வலிகாமம் வலயத்திற்குட்பட்ட 4 பாடசாலைகளுக்கு 34 லட்சம் ரூபாவும், தீவக வலயத்திற்குட்பட்ட 11 பாடசாலைகளுக்கு 35 லட்சம் ரூபாவும், தளபாடக் கொள்வனவுக்கென ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளதாக யாழ்மாவட்ட 'நிக்கொட்' பணிப்பாளர் எஸ்.சாம்பசிவம் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுக்கென நெதர்லாந்து அரசு ஏற்கனவே 4 கோடி 94 லட்சம் நிதியினை வழங்கியிருந்தது.

அந்த நிதியின் மூலம் யாழ்மாவட்டத்திலுள்ள கோப்பாய், சங்கானை, சாவகச்சேரி, மருதங்கேணி, சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை, நல்லூர் ஆகிய ஏழு பிரதேச செயலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்துள்ள சுமார் 1985 குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவீதம் வழங்கப்பட்டு வருவதாகவும் 'நிக்கொட்' பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம-5)

## பெண் போராளி விபத்தில் மரணம்!

கிளிநொச்சி,மார்ச்26

கடந்த 22 ஆம் திகதி நடந்த விபத்துச்சம்பவம் ஒன்றில் பெண் போராளியான மேஜர் சாருமதி (செல்வநாயகம் உமாதேவி - தணங்களப்பு, சாவகச்சேரி) என்பவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)

# வடக்கு - கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் இன்று நோர்வே தூதுவருடன் சந்திப்பு

## மூன்றாந்தரப்பு குறித்து ஆராயப்படும்

வடக்கு-கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தை நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் இன்று பிற்பகல் 2 மணிக்கு சந்திப்பொன்றுக்கு அழைத்துள்ளார்.

அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், நூர்தீன் மசூர், நு.ஆ தலைவி பேரியல் அஷ்ரப், எம்.எஸ்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் எம்.பி., பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத், டாக்டர் ஹப்ரத் ஆகியோர் நோர்வே தூதுவரை இன்று சந்திக்கவுள்ளனர்.

அரசு - புலிகள் சமாதானப் பேச்சில் முஸ்லிம் பிரதிநிதிகள் மூன்றாந்தரப்பாக கலந்துகொள்ள வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்து வருவது தெரிந்ததே.

முஸ்லிம் பிரதிநிதிகள் மூன்றாந்தரப்பாக சமாதானப் பேச்சில் கலந்து கொள்வது குறித்து நோர்வே தூதுவர், ஒரு முடிவை இன்று அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

# பாலியல் வல்லுறவு வழக்கில் எதிரிக்கு ஒத்திவைப்புச் சிறை!

யாழ்ப்பாணம்,மார்ச்26

உரும்பிராயைச் சேர்ந்த சிறுமி ஒருத்தியைக் கடத்தி அவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞனுக்கு சிறைத்தண்டனை விதித்த யாழ்மேல் நீதிமன்றம், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒன்றரை லட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கும்படியும் உத்தரவிட்டது.

உரும்பிராயைச் சேர்ந்த மரிய கிறிஸ்லி என்ற 16 வயதுச் சிறுமியை 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் கடத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக அதேயிடத்தைச் சேர்ந்த கேராஜசேகரம் என்பவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு யாழ்மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன் எடுக்கப்பட்ட சமயம், எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

எதிரி மீதான முதலாவது குற்றச்சாட்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடுழியச் சிறைத்தண்டனையும் - இரண்டாவது குற்றச்சாட்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருட கடுழியச் சிறைத்தண்டனையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

நஷ்டஈட்டை வழங்க இருமாத தவணை தரும்படி எதிர்தரப்பில் கோரப்பட்டது.

அக்கோரிக்கையை நீதிபதி ஏற்றுக்கொண்டார். எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நஷ்டஈட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்றும் - அந்தத் தவணைக்குள் நஷ்டஈட்டை எதிரி வழங்கத் தவறின் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விலக்கப்பட்டு சிறைத்தண்டனையாக விதிக்கப்படும் என்றும் - உத்தரவிட்டார்.

அபராதத் தொகையான ஆயிரத்து 500 ரூபாவைச் செலுத்தத் தவறின் 6 மாத கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் அரச தரப்பில் அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி ஆஜரானார். (ஐ-3-10)

## சந்தேகநபர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்26

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான முதலாம், நான்காம் சந்தேகநபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி யாழ்நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

முதலாவது சந்தேகநபரான கந்தசாமி ஜெகதீஸ்வரன், 4 ஆவது சந்தேகநபரான காராளசிங்கம் சிந்துபரன் ஆகிய இருவரின் விளக்கமறியல் உத்தரவு நேற்று முடிவடைந்ததால் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குத் தவணை தினமான நாளை வரை இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-8)

# வாகனங்களின் புகையை கட்டுப்படுத்தத் திட்டம்

கொழும்பு,மார்ச்26

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக, வாகனங்கள் வெளிவிடும் புகையைக் கட்டுப்படுத்தும் திட்டமொன்றை சூழலியல் இயற்கை வளங்கள் அமைச்சு செயற்படுத்த உள்ளது.

இதன்படி சூழலை மாசுபடுத்தும் அளவுக்கு புகையை வெளியேற்றும் வாகனங்களுக்கு எதிர்காலத்தில் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதில்லை என்று அமைச்சு திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நடவடிக்கையைச் செயற்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் சுமார் 300 சோதனை நிலையங்கள் திறக்கப்படும் எனவும் -

இந்த நிலையங்களில் மேற்கொள்ளப்படும் சோதனைகளில் வாகனங்களின் வேகமும் அவை வெளியேற்றும் புகையின் அளவும் கணக்கிடப்பட்டு பதிவு செய்யப்படுமென்றும் -

இதனடிப்படையிலேயே வாகனப் பத்திரம் புதுப்பிக்கப்படுவது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் - தெரிய வருகின்றது. (ஏ)

# அரசு ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு,மார்ச்26

தெற்கில் அரசாங்கத்துறை ஊழியர்கள், வங்கி, காப்புறுதி, சமுர்த்தி ஊழியர்கள் ஆகியோர் இன்று நாடு தழுவிய ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்வர். தனியார்துறை தொழிற் சங்கங்கள் சிலவும் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்கின்றன.

அரசாங்க ஊழியர்களுக்கு 4,000 ரூபா சம்பள உயர்வு, வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், தனியார் மயமாக்கலை நிறுத்துதல் உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து அரசுத் துறையைச் சேர்ந்த 52 தொழிற்சங்கங்கள் இந்த வேலைநிறுத்தத்தை மேற்கொள்கின்றன.

இன்று காலை 10மணிக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ஊழியர்கள் தத்தமது வேலைத் தளங்கள் எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர்.

பின்னர் ஊர்வலமாகச் சென்று விகாரமாதேவி பூங்காவில் ஒன்று கூடுவர். அங்கிருந்து அனைத்து ஊழியர்களும் லிப்டன் சுற்றுவட்டாரத்துக்கு சென்று ஆர்ப்பாட்டம் செய்வர்.

இறுதியில், ஹைட்பார்க் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தங்களின் கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் தொடர்ந்து மௌனம் சாதிக்கு மேயானால் எதிர்காலத்தில் பொது வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டிவரும் என்று அரசாங்கச் சேவை தொழிற்சங்கங்களின் அமைப்பாளரான டபிள்யூ.ஏ.டி.விமலரத்ன தெரிவித்திருக்கிறார். (ம)

## இரு சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி,மார்ச்26

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையவந்த இரு சிறுமிகள் கிளிநொச்சி அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து அவர்களின் பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

கொக்குவில் காளிகோவிலடியைச் சேர்ந்த அருளம்பலம் அகிலா, திருநெல்வேலி பாரதிபுரத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் சுமித் ஆகியோரே பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ-3)

# பக்தாத்தைத் தாக்குவதற்கான நகர்வுகளில் அமெரிக்கப் படை

நஸாரியா,மார்ச்26

ஈராக் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்து ஐந்து நாள்கள் கடந்த நிலையில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் தலைநகர் பக்தாத் மீதான தரைவழித் தாக்குதல்களை ஆரம்பிப்பதற்காக நகரத் தொடங்கியுள்ளன. குவைத்தில் இருந்து ஈராக்கின் தென்மேற்குத் திசையில் ஊடுருவி, மேற்குத் திசை நோக்கி முன்னேறிய படைகள் பக்தாத்துக்குத் தெற்கே 100 கிலோமீற்றர் தூரம் வரை முன்னேறியுள்ளன. அங்கிருந்து பக்தாத் மீதான தரைவழித் தாக்குதலை ஆரம்பிப்பதற்காக பக்தாத்துக்கு இணைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் கூட்டுப் படையினர் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஐந்து நாள்களாக 'ஆச்சரியமும் அதிர்ச்சியும்' என்று பெயரிடப்பட்டு பக்தாத்தின் உள்ளே சரமாரியான விமானக் குண்டுத் தாக்குதலும் ஏவுகணைத் தாக்குதலும் மிகக் கடுமையாக நடத்தப்பட்டன. நேற்று முன்தினம் இரவு அமெரிக்க ஆயுத ஹெலிகளும் போர் விமானங்களும் பக்தாத்திற்கு வெளியே உள்ள ஈராக்கிய குடியரசுப் படைகளின் நிலைகள் மீது மிகக் கடும் தாக்குதலை நடத்தின.

அதனைத் தொடர்ந்து பக்தாத்தைக் கைப்பற்றுவதற்கான தரைத் தாக்குதலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பக்தாத்துக்கான நகர்வில் ஈராக்கியப் படைகளிடம் இருந்து தாம் மிகக் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிவரும் என்று கூட்டுப் படைகள் எதிர்பார்க்கின்றன. மிகமோசமான நேரடிச் சண்டை இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக ஈராக் போருக்குத் தலைமை தாங்கும் அமெரிக்க ஜெனரல் டொம்மி பிராங் கூறினார். "இது ஒரு பயங்கரமான ஆயுதப் போர்" - என்றார் அவர்.

இதற்கிடையில் -

ஒருவேளை, தலைநகர் பக்தாத் எதிரிப் படைகளிடம் வீழும் நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு பக்தாத்தைப் பாதுகாத்து நிற்கும் ஈராக்கியப் படைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனங்கள் பல செய்திகளை வெளியிட்டுள்ளன. புலனாய்வுத் தகவல்களை வைத்து இநதச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து பக்தாத்தின் எந்த எல்லைவரை அமெரிக்கப் படைகள் முனனேறலாம் என்பது பற்றிய வரைபடம் ஒன்றை பென்ரகன் தயாரித்துள்ளது. புலனாய்வுத் தகவல்களைக் கொண்டு இந்த வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்கப் படைகள் நிலைகொண்டுள்ள பகுதிக்கும் பக்தாத்துக்கும் இடையில் இருக்கும் ஆற்றை அமெரிக்கப் படைகள் கடந்துவிட்டால், இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்த அதிபர் சதாம் உத்தரவிட்டுவிடுவார் என்றும் அந்தப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளனவாம்.

அதிபர் சதாம் ஏற்கனவே நாட்டின் தெற்குப் பகுதியில் இருக்கும் ஷியா முஸ்லிம்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்திவிட்டு அதற்குக் காரணம் அமெரிகாதான் என்று கூறக்கூடும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

தாக்குதலுக்குத் தலைமை தாங்கும் அமெரிக்க ஜெனரல் பிராங், தாம் இப்போது பக்தாத்தில் இருந்து 60மைல் (100 கிலோ மீற்றர்) தூரத்திலும் குறைவான தொலைவிலேயே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கூட்டுப் படைகளும் ஈராக்கிய குடியரசு இராணுவமும் நேருக்கு நேர் எதிர்கொள்ளும் தருணம் மிகக்கடினமான ஒன்றாகவே இருக்கும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் தெரிவித்தார்.




கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் அமெரிக்க விமானங்கள் 900 தடவைகள் ஈராக் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுப் படைகள் பக்தாத்துக்குள் நுழையும்போது இருக்கும் எதிர்ப்புக்களைக் குறைப்பதற்காக இந்தத தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதேசமயம் - தென்கிழக்கு ஈராக்கில் ஈரானிய எல்லையோரப் பகுதிகளில் திடீரென நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் படையினர் தரையிறக்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை ஈராக்கில் மோசமான காலநிலை நிலவியதாகவும், அதனால் ஹெலிகள் மூலமான தாக்குதல் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நஸிரியா நகரைக் கைப்பற்றுவதற்கு நடந்த கடும் சண்டையில் 10 அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் அறிவித்துள்ளது. எனினும், எதிரிப் படைகள் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றுவிட்டதாகவும் அது தெரிவித்தது.

ஈராக் போரால் அங்குள்ள பல லட்சக்கணக்கான மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைப்பது கஷ்டமாகியுள்ளதாகவும், அவர்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க உடன் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈராக் போர் குறித்து இந்த வார பிற்பகுதியில் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# அபாச்சி ஹெலி வீழ்த்தப்பட்டது; இரு விமானிகள் ஈராக் வசம்

பக்தாத்,மார்ச்26

அமெரிக்காவின் தாக்குதல் ஹெலிகளில் முதற்தரமானவையான அப்பாச்சி ரக ஹெலிகள் இரண்டு ஈராக்கினால் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது. ஹெலி ஒன்றின் விமானிகள் இருவரையும் அது கைதுசெய்துள்ளது. அவர்கள் இருவரும் ஈராக்கிய தொலைக்காட்சியில் நேற்றுக் காட்டப்பட்டார்கள்.

சீவ் வோரண்ட் அதிகாரி டேவிட் வில்லியம் (வயது 30) மற்றும் சீவ் வோரண்ட் அதிகாரி ரொனால்ட் ஜங் (வயது 26) ஆகிய இருவருமே ஈராக்கியப் படைகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தலைநகர் பக்தாத்துக்கு தென்மேற்கே 100 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் நகர் ஒன்றில் இந்தக் ஹெலிகள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈராக்கிய தகவல்துறை அமைச்சர் கூறினார். வீழ்த்தப்பட்டதாகக் கூறப்பட்டதில் ஒரு ஹெலியின் படத்தை ஈராக்கியத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அது சேதமடையாமல் இருந்தது. அந்தக் ஹெலியை விவசாயி ஒருவரே சுட்டுவீழ்த்தியதாக ஈராக் கூறுகின்றது.

இரவுநேர நகர்வுகளுக்கு உதவியாக இந்தக் ஹெலியும் மற்றும் சில ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டிருந்ததாகவும், தாழப்பறந்து தாக்குதல் நடத்துவதில் இந்தக் ஹெலிகள் முக்கிய பங்காற்றக்கூடியவை என்பதால் 'தரைத் துருப்புக்களின் நகர்வுகளுக்கு பெரும் உதவியாக இவை பயன்படுத்தப்படுவது வழமை. அதத கைய நடவடிக்கை ஒன்றின்போது ஈராக்கிய துருப்பினர் விமான எதிர்ப்பு ஆயுதங்களால் இந்தக் ஹெலிகள் மீது தாக்குதல் நடத்தியதில் ஏனைய ஹெலிகள் சிலவற்றுக்கு சன்னங்கள் தாக்கியுள்ளன. அவற்றுடன சென்ற ஹெலியில் ஒன்று காணாமற்போய்விட்டதாக அமெரிக்கா முதலில் அறிவித்தது. ஆனால், தாம் இரு ஹெலிகளைச் சுட்டுவீழ்த்தியதாக ஈராக் கூறுகின்றது.

அந்தக் ஹெலியில் இருந்து கைது செய்யப்பட்ட இரு விமானிகளும் நேற்று ஈராக்கிய தொலைக்காட்சியில் காட்டப்பட்டனர். அவர்களிடம் கேள்விகள் எதுவும் கேட்கப்படவில்லை. இருவரும் நல்ல தேகாரோக்கியத்துடன் இருந்ததாகத் தெரிந்தது. (ம)



வீழ்த்தப்பட்ட அபாச்சி ஹெலியின் முன் ஏ.கே. துப்பாக்கியுடன் ஈராக்கியர்.



கைதான இரு விமானிகள்

# கைதிகளை மனிதாபிமானத்துடன் ஈராக் படைகள் நடத்தவேண்டும்

## இல்லையேல் கடும் விளைவு என எச்சரிக்கிறார் புஷ்

ஈராக் தன்வசம் பிடித்து வைத்துள்ள அமெரிக்கப் போர்க் கைதிகளை மனிதாபிமானத்துடன் நடத்தவில்லையாயின் கடும் எதிர்விளைவுகளை அது சந்திக்க வேண்டி ஏற்படும் என்று அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிராக நடத்தப்படும் போரில் தமது படைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக அவர் கூறினார்.

ஈராக் போர் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேரழிவு ஆயுதங்களை அழிக்க மறுத்துவரும் சதாம் ஹுசைன், ஈராக்கில் கொடுங்கோல் ஆட்சி நடத்தி வருகின்றார். அவரைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு ஈராக் மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதே அமெரிக்காவின் நோக்கம். இந்தப் போரில் அப்பாவி ஈராக்கியர்கள் கொல்லப்படுவதற்கு அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது.

அமெரிக்கப் படைகளிடம் ஏராளமான ஈராக் வீரர்கள் தாமாகவே முன்வந்து சரணடைந்துள்ளனர். அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளின் தாக்குதலை எதிர்கொள்ளமுடியாமல் தடுமாறி வருகின்றார் சதாம். சிறிது சிறிதாக அவர் தனது கட்டுப்பாட்டையும் இழந்து வருகின்றார். இந்தப் போரில் அமெரிக்கா வெற்றிபெறுவது உறுதி.

போர்க் கைதிகளைத் துன்புறுத்துவோரை போர்க்குற்றவாளிகளாகக் கருதி கடும் தண்டனை வழங்கமுடியும்.

இன்னும் ஒரு நாள்களில் ஈராக்கியப் படையினர் எம்மிடம் சரணடைந்து விடுவார்கள். அல்லது வீழ்ச்சியைச் சந்திப்பார்கள். இந்தப் போரில் இதுவரை ஈராக் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தாதற்கு நன்றி. ஆனால், அப்படியொரு தாக்குதல் நடத்தப்பட்டால் அதனை எதிர்கொள்ளவும் நாங்கள் தயார். சதாம் ஆட்சிக்கு முடிவுகட்டியபின் ஈராக் மக்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் அமெரிக்கா செய்யும் என்றார் புஷ். (ம)

## தெற்கு ஈராக்கின் பஸ்ரா நகரில்

# மனிதப் பேரவலம் ஏற்படும் அபாயம்!

குவைத் சிற்றி,மார்ச்26

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான தென்பகுதியில் உள்ள பஸ்ராவைக் கைப்பற்ற அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் கடும் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அங்கு சிக்கிக் கொண்டுள்ள 15 லட்சத்துக்கும் மேலான மக்கள் மனிதப் பேரவலத்தை சந்திக்கும் நிலை உருவாகியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

நான்காவது நாளாக பஸ்ராவில் கடும் சண்டை இடம்பெற்றுவருகிறது. கூட்டுப்படைகள் பெரும்பாலும் இந்த நகரத்தை சுற்றிவளைத்துக் கைப்பற்றும் சூழல் தோன்றி இருந்தாலும், அங்குள்ள ஈராக்கியப் படையினர் சரணடையும்வரை நகரத்துக்குள் நுழையாமல் வெளியே காத்திருக்கின்றன. எனினும், உள்ளே இருக்கும் ஈராக்கியப் படையினர் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திவருகின்றன.

போர் தொடர்ந்து கொண்டிருப்பதால் அங்குள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வது கூட தடைப்பட்டுள்ளதாக ஐ.நா. கூறுகின்றது.

அந்த மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைப்பதும் தடைப்பட்டுள்ளது. சுமார் ஒரு லட்சம் குழந்தைகள் நோயினால் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பஸ்ரா நகர மக்கள் அழுக்கான ஆற்று நீரையே இப்போது தமது பாவனைக்காக எடுத்துவருகின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு பெரும் கஷ்டத்தின் மத்தியிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நல்ல குடிதண்ணீரை வழங்குவதற்கு பெரு முயற்சிகளை எடுத்து வருகின்றது. (ம)

# 51 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 1926 - 02 - 26



மறைவு 2003 - 02 - 04

## அமரர் சின்னத்தம்பி முருகேசு

(இளைப்பாறிய ஊழியர், துறைமுக அதிகாரசபை)

யாழ். எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. மு. சத்தியசீலனின் தந்தையார் அமரர் சின்னத்தம்பி முருகேசு அவர்களின் ஆத்மா சாந்தியடைய இந்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (15892) Dr.க.சிவராசாவும் குடும்பத்தினரும்.

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணுலகில் 12 - 06 - 1951



விண்ணுலகில் 24 - 02 - 2003

## அமரர் செல்லர் சின்னத்துரை

அன்புள்ள அப்பாவாய் அறிவுரைக்கும்
ஆசானாய், எம்மை ஆளாக்கிய தந்தையே!
இன்பம் அனைத்தும் நாம் வென்று, வாழ்வில்
ஈடேறவைத்த எம் அன்புத் தெய்வமே!
உள்ளத்தில் உம் நினைவலைகள்
ஊற்றாகி அருவியாய் உருகியோட
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
ஏனையா ஈசனடி காண விரைந்தாய்?
ஐயாறு நாள்கள் ஆனாலும் எம் மனதில்
ஆறாது சோகம் அகலாது உம் நினைவு!

நாச்சிமார் கோயிலடி,
கரணவாய் வடக்கு. (15722) சி.சுதாகரன் குடும்பத்தினர் (லண்டன்)

# ஓராண்டு நினைவலைகள்

பூவுலக மலராய் 1935 - 12 - 20



விண்ணுலக விளக்காய் 2002 - 03 - 07

## அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி (நவமி) 26-03-2003

என்றும் அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் தந்தையாய்
அரவணைப்பின் இருப்பிடமாய்
ஆலோசனைக் கர்த்தாவாய்
அறிவூட்டி ஆளாக்கிய தெய்வமாய்
தன்னலமற்ற குடும்பத் தலைவனாய்
பண்புமிக்க நண்பனாய், சகோதரனாய்
எங்கள் இதயங்களில் வாழும்
எமதருமைத் தந்தையே!
உங்கள் பிள்ளைகளுக்காய்
நீங்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல
நீங்கள் காட்டிய வழிநடந்து உங்கள் கனவு
நனவாக என்றும் வாழ்வோம்
நீர் சென்று ஓராண்டு ஓடினும்
ஓயாத உங்கள் நினைவால்
இறைவனையே வேண்டி நிற்கின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சங்கத்தானை
சாவகச்சேரி (15722) உங்கள் பிரிவால் வாடிநிற்கும்: குடும்பத்தினர்

## காமுகன் நையப்புடைப்பு!

வீட்டில் தனித்திருந்த இளம் குடும்பப் பெண்ணின் வாயினுள் துணியைத் திணித்துவிட்டு பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்த நபர் ஒருவர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரணவாய், புறாப்பொறுக்கியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அந்தக் காமுகனிடமிருந்து விடுபடத் திமிறிய பெண் அறையின் ஜன்னல் கதவுகளைக் கையினால் தொடர்ந்து அடித்து ஒலி எழுப்பியதாகவும் -

அப்பகுதி பாடசாலையொன்றின் ஆசிரியர்களும் அதிபர் மற்றும் பொதுமக்கள் அதனைக் கேட்டு வீட்டினுள் நுழைந்து அப்பெண்ணைக் காப்பாற்றியதாகவும் -

சம்பந்தப்பட்ட நபரை பொதுமக்களநையப்புடைத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பொது அறிவுப் போட்டி

மக்கள் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து 'சிசு உதான' கணக்கு வைத்திருக்கும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் 'பொது அறிவுப்போட்டித் தொடர்' ஒன்றை நடத்தவுள்ளது. (ஒ-ரி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 25 - 04 - 1929



இறப்பு 24 - 02 - 2003

## திருமதி கந்தையா இரத்தினம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே அம்மா!
குறுகிய நேரமதில் ஓடிமறைந்தனையோ?
மாதமொன்று ஆனாலென்ன - எம்
உயிர் உள்ளவரை எந்நாளும் மறவோம் உம்மை!

இன்று (26-03-2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

"செல்வகம்"
முல்லையடி,
பளை. (15868) கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


உ

முயற்சி செய் வெற்றி நிச்சயம்

"மெய்ப்பொருள் காண்க" புலமைப் பரிசில் போட்டி

கணினிப் பிரியர்களே!

இது கூடிய விரைவில் எம்மால் ஸ்தாபிக்கப்படவிருக்கும் ஒரு கணினிக் கல்விக் கூடத்தின் சின்னமாகும். இதன் உட்பொருளை நான்கு அல்லது அதற்கு குறைவான சொற்களில் கண்டு பிடித்து எம்முடன் தொடர்பு கொள்ள விரும்புகின்றீர்களா?...... விரும்பினால்

(α) mail பண்ணப்போகின்றீர்களா? ☞ tsathiyendra@yahoo.com ஐ நாடவும்

(β) இல்லை Dial பண்ணுவதாக உத்தேசமா? So ☞ dialog- 146945
(வாக்கிய பஞ்சாங்க நேரம் பகல் 10.10- பகல் 11.58 வரை மட்டும்)

(γ) அல்லது பழையன பழையனவாகவே இருந்து விடட்டும் என்று விட்டு விடாமல் பதிவுத் தபாலில் இடது பக்க மேல் மூலையில் "மெய்ப்பொருள் காண்க" புலமைப் பரிசில் போட்டி என்று தெளிவாகக் குறிப்பிட்டு

Proprietor,
Sri Sakkarah Computer Eye
No. 7 1/4, Palaly Road, Thirunelvely Junction, Jaffna.

என்ற முகவரிக்கு 01.04.03 இற்கு சற்று முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடைகளுடன் தொடர்பு கொள்பவர்களில் மூவர் குலுக்கல் முறை அல்லாது Numerology, Bin. Sort. முன்னுரிமை என்பவை கருத்திற் கொண்டு தெரிவு செய்யப்பட்டு புலமைப் பரிசில் வழங்குவதுடன் அவர்களின் பெயர்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

Hint (சாடைக்குறிப்பு) :- ∞ முடிவிலி


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## 26-03-2003 புதன்



## அமரர் சின்னத்தம்பி சடாட்சரம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

பிறப்பு 24-09-1921 இறப்பு 24-02-2003

24.02.2003 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி சடாட்சரம் அவர்களின் சிவபதப்பேறு குறித்து இன்று (26.03.2003) புதன்கிழமை காலை 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டவர்களிற்கும் பல வழிகளிலும் ஆறுதல்கூறி, உடன் கருமங்களாற்ற உறுதுணை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களைக் காணிக்கையாக்கியவர் களிற்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"சிறிநிகேதன்"
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். - குடும்பத்தினர். (சி-37082)

உதயன்

## ஈழத்தமிழரின் ஐக்கியத்துக்கு வேட்டு வைக்கும் அரசியல்வாதிகள்

வடக்கிலும் கிழக்கிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஜப்பானின் ஹக்கோனி நகரில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுகளின்போது இந்தத் தேர்தலை நடத்துவதற்கான இணக்கம் காணப்பட்டது.

வழமையாக அரசு - இராணுவ - கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் மட்டுந்தான் தேர்தல்களை - அது உள்ளூராட்சித் தேர்தல் என்றாலும், மாகாண சபைகளுக்கான தேர்தல் என்றாலும், பொதுத் தேர்தல் என்றாலும் - அரசு நடத்தி வந்திருக்கின்றது. நாடளாவிய ரீதியில் நடத்தப்படுகின்ற பொதுத் தேர்தலின் வாக்களிப்பைக்கூட புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எப்போதும் அரசு நடத்தியதில்லை. அந்தப் பிரதேச மக்கள் விரும்பினால் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசப் பகுதிகளுக்கு வந்து வாக்களிக்கலாம் என்று தெரிவித்து மாற்று ஏற்பாடுகளையே அரசுத் தரப்பு செய்து வந்திருக்கின்றது.

ஆனால், இந்தமுறை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் புலிகளின் உதவியோடு சுதந்திரமான - சுயாதீனமான - நீதியான - தேர்தல்களை நடத்த அரசுத் தரப்பு முயல்கின்றது.

அதேபோன்று, இலங்கை அரசின் எந்தத் தேர்தல்களையும் தமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நடத்த புலிகள் அனுமதித்ததில்லை; அத்தகைய தேர்தல்களை அவர்கள் அங்கீகரித்ததும் இல்லை.

ஆனால், இந்த முறை தமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில், இலங்கை அரசின் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கப் புலிகள் இணங்கியிருக்கின்றனர். இது புலிகளின் நிலைப்பாட்டில் முக்கியமானதொரு மாற்றம். அந்த நிலை மாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன?

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஜப்பானின ஹக்கோனி நகரில் செய்தியாளர்களோடு உரையாடியபோது இதற்கான காரணத்தை விளக்கினார்.

"வடக்கு - கிழக்குத் தமிழர்களின் தாயகப் பூமியில் உடனடித் தேவையாக நிறைவேற்றப்படவேண்டியிருப்பது புனரமைப்புப் பணிகளே. இந்த நடவடிக்கையை உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கான உபகுழு (சிரான்) முழுமூச்சில் முன்னெடுக்கவிருக்கின்றது. இந்தச் சமயத்தில் இப்பிரதேசங்களில் உள்ளூராட்சி அமைப்புகள் சிறப்பாக இயங்கினால் 'சிரான்' உப குழுவின் பணியை வேகமாக - துரிதமாக - நிறைவேற்ற அது பெரிதும் உதவும். 'சிரான்' தனது திட்டங்கள் பலவற்றை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய உள்ளூராட்சி அமைப்புகள் மூலமே நிறைவேற்ற முடியும். இதனால், சிரானின் செயற்பாடுகள் துரிதமாகும். அத்தோடு, அந்தந்தப் பிரதேசத்துக்குரிய புனரமைப்புப் பணிகள் மற்றும் நடவடிக்கைகளில் அந்தந்தப் பிரதேச மக்களின் பிரதிநிதிகளே நேரடியாகப் பங்குபற்றும் வாய்ப்பும் கிட்டும். இதன் மூலம் சிரானின் பணி மக்கள் மயப்படுத்தப்படவும் சந்தர்ப்பம் வரும்." - இப்படி மதியுரைஞர் பாலசிங்கம் விளக்கியிருந்தார்.

ஆக, புனரமைப்புப் பணிகளை சிறப்பாக முன்னெடுக்கும் நன்நோக்குடன்தான் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன. அந்தப் பணிகளை பொறுப்பேற்றிருக்கும் 'சிரான்' உபகுழுவின் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக அமையக்கூடிய தரப்பினர் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்துக்கு வந்தால்தான், போரினால் அழிவுற்றிருக்கும் வடக்குக் கிழக்கை மீளமைக்கும் பணி சிக்கல், பிடுங்கலின்றி செவ்வனே நிறைவேறும். இதுதான் யதார்த்தம்.

'சிரான்' உபகுழுவில் தமிழர் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் 'விடுதலைப் புலிகள். எனவே, புலிகளோடு சேர்ந்து செயற்படக்கூடிய சக்திகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட்டு, மக்களின் வாக்குச்சீட்டு மூலமான அங்கீகாரத்துடன் தெரிவாகி, அதன்மூலம் புனரமைப்புப் பணிகளை இணைந்து முன்னெடுப்பதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வதே இன்று வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கும்.

இதைப் புறந்தள்ளி -

தாம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாவதற்கு மட்டும் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒற்றுமையைப் பயன்படுத்தி வாக்குத்திரட்டியதை மறந்துவிட்டு -

உள்ளூராட்சித் தேர்தல்களில் கூட்டமைப்புக் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிடுவதே நல்லது என்று இப்போது கருத்துரைக்கும் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளை, தமிழரின் ஒற்றுமையைக் குலைக்கும் கோடரிக் காம்புகளாகவே சரித்திரம் பகரும் நிலை ஏற்படும்.

ஈழத்தமிழரின் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளின் பின்னால் தமிழ் இனம் திரண்டு நிற்பதை சகிக்கமுடியாத சில அந்நிய சக்திகளின் ஊதுகுழல்களாகவே இந்த அரசியல் கோமாளித்தனம் புரிவோரின் கருத்துக்களைக் கருதவேண்டியுள்ளது.

## மிதிவெடி அகற்றும் பணியில் மொசாம்பிக் நாட்டுக் குழுவினர்

### நாய்களுடன் யாழ். வந்தனர்

அமெரிக்க அரசின் செயற்றிட்டத்தின்கீழ் விரைவுச் செயற்பாட்டில் அமைந்த மிதிவெடி அகற்றும் படையைச் சேர்ந்த (Quick Reaction Demining Force) 22 மொசாம்பிக் நாட்டவர்கள் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவதற்காக யாழ். வந்துள்ளனர். இக்குழுவினருடன் மிதிவெடி அகற்றும் பணியில் விசேட பயிற்சி பெற்ற 4 மோப்பநாய்களும் வந்துள்ளன.

றொங்கோ(Ronco) என அழைக்கப்படும் இம் மிதிவெடி அகற்றும் குழுவினர் தென்மராட்சிப் பகுதியிலேயே தமது முதற் கட்ட மிதிவெடி அகற்றும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர். இம்மாதம் 30ஆம் திகதிமுதல் இக்குழுவினர் சரசாலைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியை மேற்கொள்வர். இதற்கான ஆரம்ப வேலைகள தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆறு மாதங்களுக்கு முன்னரும் சரசாலைப் பகுதியில் மொசாம்பிக் நாட்டைச் சேர்ந்த மிதிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

## மாதர் மான்மியம்

### சூட்டினாள் ஆங்கிலப் பெயர்

நந்தனை முடித்த மங்கை
நல்லதோர் குழந்தை வேண்டி
கந்தசஷ்டி விரதம் காத்து
கருவுற்று குழந்தை பெற்றாள்
கந்தனது பேரொன்று வைக்க
கணவனோ இரந்து வேண்ட
சுந்தரி மறுத்துப் பேசி
சூட்டினாள் பேர் 'லிங்கனென்று'
கந்தன் பேர் வைப்போமாகில்
காரியம் பிசகு மென்றாள்
கந்தனை போலிவன் இரண்டு
காரிகையை மணப்பானாகில்
வந்திடும் குடும்பச் சண்டை
வழக்காட நேரும் என்றாள்.

- விகடகவி.

### தமிழ்மொழிப் புறக்கணிப்பைத் தடுக்க

## வடக்கு - கிழக்கு பிரதேசத்துக்கென தனியே கல்வி நிறுவகம் ஒன்று தேவை!

### ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவிப்பு

திருகோணமலை,மார்ச்26

தேசிய கல்வி நிறுவகம் தமிழ்மொழியைப் புறக்கணிப்பதாகவும் -

ஆகவே, வடக்கு - கிழக்குக்கென கல்வி நிறுவகம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமெனவும் -

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் திருகோணமலையில் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

தேசிய கல்வி நிறுவகம் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம கொடுக்காதுவிட்டாலும் சம அந்தஸ்தாவது கொடுக்கவேண்டும். மாறாக தமிழ்மொழியை அது புறக்கணித்து வருகிறது. இது திட்டமிட்டு எமது உரிமையை மறுக்கும் செயலாகும்.

தேசியக் கல்வி நிறுவகம் தயாரித்து வெளியிட்ட பாடசாலை மாணவர்களுக்கான உசாத்துணை நூல்களில் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. உசாத்துணை பாடநூல் தொடர்பான ஒளிநாடா வெளியீட்டில் சிங்கள மொழிமூலம் 90 ஒளிநாடாக்களும் தமிழ்மொழிமூலம் 06 ஒளிநாடாக்களும் வெளியிடப்பட்டுள்ளன. இணைவளப் புத்தகங்களைப் பொறுத்தமட்டில் சிங்கள மொழியில் 88 புத்தகங்களும், தமிழ்மொழியில் 07 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய புத்தகங்களைப் பொறுத்தவரை சிங்கள மொழியில் 135 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. ஆனால், தமிழ்மொழியில் ஒரு புத்தகமும் வெளியிடப்படவில்லை.

- இவ்வாறு தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதைத் தவிர்க்க வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென கல்வி நிறுவகம் ஒன்று தேவை" என்று அவர் தெரிவித்துள்ளார். (ஒ)

## கழிவுப்பொருள்களை வீதியில் இடுவதில் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும்!

### மாநகராட்சி அதிகாரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச்26

குப்பை, கூளங்களை வீதியில் போடும் விடயத்தில் மக்கள் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும் என மாநகரசபையின் பொதுச் சுகாதார பொறியியலாளர் பிரிவுப் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் வெட்டப்பட்ட வாழைமரங்கள் உட்பட மரக்கழிவுகள் போன்றவற்றை அதிகளவில் நாளாந்தம் வீதிகளில் குவித்து வருகின்றனர். ஆனால்; வீதிகளில் சேரும் சிறு குப்பை கூளங்களை அப்புறப்படுத்தும் பொறுப்பு மட்டுமே மாநகராட்சி தொழிலாளர்களுக்கு உண்டு.

இதனை மக்கள் புரிந்துகொள்ளாது தமது வீடுகளுக்குள் இருந்து பெருமளவு குப்பைகளை வீதிகளில் போடுவதால் மாநகராட்சி தொழிலாளர்களும், மாநகரசபை நிர்வாகமும் நாளாந்தம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

வீட்டில் சேரும் பாரிய அளவிலான கழிவுகளை குறைந்த செலவில் மாநகர சபை ஏற்றி அகற்றும் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. எனவே, பாரிய கழிவுகளை வீதிகளில் இடாமல் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இதேவேளை, பொதுமக்கள் உணவுப் பொருள்களின் கழிவுகளைத் தகுந்த முறையில் இல்லாது சீரின்றி வீதிகளில் வீசுகின்றனர். இவ்வாறு வீசப்படும் கழிவுப் பொருள்கள் கட்டாக்காலி நாய்கள், காகங்கள் போன்றவற்றால் அப்பகுதியெங்கும் சிதறடிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இது சுகாதாரச் சீர்கேடுகளுக்குக் காரணமாக அமைகின்றது. ஆகவே, இத்தகைய நிலைமைகள் ஏற்படாதவாறு பொதுமக்கள் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும். - என்று அவர் கேட்டுக்கொண்டார். (ஒ-180)

### கொழும்பில் உள்ள தூதரகத்தில்

## பிரிட்டிஷ் 'விஸா' வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது!

கொழும்பு,மார்ச்26

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தில் பிரிட்டனுக்கான 'விஸா' வழங்கும் பணி மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஈராக் மீது அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் தாக்குதலை ஆரம்பித்துள்ளதை அடுத்து பிரிட்டனுக்குள் விரும்பத்தகாதவர்கள் நுழைவதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## கிராமப்புறப் பாடசாலைகளை மேம்படுத்த நடவழிக்கை அவசியம்!

### கல்வியியற்றுறை பேராசிரியர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்26

கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. ஆனால், நகர்ப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் எண்ணிக்கை மேலதிகமாக உள்ளது. இந்த நிலை மாறவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் க.சின்னத்தம்பி.

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற அமரர் வை.சுப்பிரமணியம் ஞாபகார்த்த கணனிப்பிரிவு தொடக்க விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலையின் அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் மேலும் தெரிவித்ததாவது:-

'மனிதருக்கு வாய்ப்புகள்,வசதிகளைத் தேடிச் செல்லும் இயல்பு இருக்கலாம். அது தவறல்ல. ஆனால், அண்மைக் காலமாக அது எல்லைகடந்து பெரும் இன்னல்களைத் தருவதாக அமைந்துள்ளது. ஆசிரியர்கள் கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். இதனால் கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. நகர்ப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாகக் காணப்படுகின்றனர். இதேபோல் கிராமப்புற பாடசாலைகளில் இருந்து வசதியுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளுக்கு மாற்றுகின்றனர். இந்தநிலை மாறவேண்டும்.

'இதற்கு பாடசாலைச் சமூகமான அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலதரப்பினரும் ஒன்றிணைந்து கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வித்தரத்தையும், வசதிவாய்ப்புக்களையும் மேம்படுத்துவதில் அதிக அக்கறை காட்டவேண்டும்' - என்றார்.

இந்நிகழ்வில் கணனிப்பிரிவுப் பெயர்ப்பலகையினை கோப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் திரைநீக்கம் செய்துவைக்க பேராசிரியர் க.சின்னத்தம்பி கணனிப்பிரிவினை நாடாவெட்டி திறந்துவைத்தார். (ஒ-180)

### நாளை

பாங்குனி 13
வியாழக்கிழமை
(27.03.2003)
திதி : தசமி
முற்பகல் 10.00வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
மாலை 5.01வரை.
சுபநேரம்: 7.44- 9.14
ராகுகாலம் : 1.44 - 3.14
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

நீங்கள் உதவி கேட்டவுடன் யோசிக்காமல் ஒப்புக் கொள்பவர் அதனை நிறைவேற்றப்போவதில்லை.

# நல்வார்த்தை பேசுவோம்!

**துவக்காலச்சிந்தனை**
**-22ஆம் நாள்-**

**எஸ்.யேசுதாஸ்**

பழிக்குப்பழி இரத்தத்திற்கு இரத்தம் இதுவே இன்றைய முழு உலகையும் நாட்டையும் சமூகத்தையும் உலுக்கிக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கும் அடித்தளமாக அமைகிறது. நலிந்தோரை வலிமைமிக்கோர் அடக்கியாழ முற்படுவதும் அதனால் பெறுமதிமிக்க உயிர்கள் அழிந்து கொண்டிருப்பதும் சர்வசாதாரணமாகி விட்டது.

இந்நிலை, இன்று நேற்றல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்வாரி மலையில் அரங்கேறியுள்ளது. எவ்வித குற்றமும் புரியாத இயேசு கிறிஸ்துமீது பொய்ப்பழி சுமத்தி சிலுவையில் அறைந்து கொன்றது ஒரு கொலைக்கும்பல். அந்தக் கொடியவரின் வாரிசுகள் இன்றும் நம் சமுதாயத்தில் இல்லையா?

பதவிக்காக, பணத்திற்காக, புகழுக்காக, தனிமனித நலனிற்காக பிறர் மீது அபாண்டப் பழிகள் கூறும் மனித முகங்கள் எத்தனை? சமூகப்பணியாளர்கள், அதிகாரிகள், அயலவரைப்பற்றி தவறான கருத்துக்களைக் கூறி மொட்டந்தலைக்கும் முளங்காலுக்கும் முடிச்சுப்போட்டு அவர்கள் கௌரவத்தையும் தன்மானத்தையும் கொலை புரிபவராக நாம் இல்லையா?

எந்தவொரு வார்த்தைப் பிரயோகமும் பல விளைவுகளை உருவாக்கும் என்பதை உணர வேண்டும். உதிர்ந்த வார்த்தைகள் மீண்டும் வாயில் நுழையா. எனவே, பேசும்போது பிறரைப் புண்படுத்தாத நல்வார்த்தைகளை நாவில வரவழைப்போம்.


## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

**25.03.2003 முதல் 14.04.2003 வரை**

சகல வகையான புடைவைகளையும்
விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. : 222 2381

(C/37090)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவற்காடு J/338 கிராம உத்தியோகத்தர்

**திரு. வேலாயுதர் நாகதேவன்**

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்றுச் சிறப்படைய இறைவனை வேண்டுகின்றோம்.

நாவற்காடு, வரணி. (15957)

கிராம அபிவிருத்திச் சங்கம்,
விவசாய சம்மேளனம்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
1947 - 02 - 20



ஆண்டவன் அடியில்
1999 - 03 - 26

**திருமதி அனற்றா இம்மனுவேல்**

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்திட
நீண்ட உன் வாழ்க்கைப் பயணத்தை
முடிவுற்றே சென்ற எம் அன்னையே!
எம்மை நீர் விட்டே மறைந்தாலும்
உம் நினைவில் வாடும் எங்களது
துயரம் தீர மீண்டும் ஒருகால் வாராரயோ?

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு. (15919)

உமது நினைவால் வாடும்:
கணவர், பிள்ளைகள்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 - 08 - 1916



மறைவு
10 - 04 - 1999

**அமரர் செல்லையா அழகரத்தினம்**

(கட்டட ஒப்பந்தகாரர்)

திதி: 26-03-2003 புதன்கிழமை

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
எங்கள் துயரம் நீங்காது.

கெருடாவில்,
தொண்டமானாறு. (15719)

மனைவி,
பேறாமகள்.

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு-கிழக்கு மாகாண சபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**

**“ஆஅவ” கடன் இல.1846 - SRI(SF)**

# கேள்வி கோரல் இல.03

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்களுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின வரும் படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைக்களுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ருபா) | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ருபா) |
|---|---|---|---|---|---|
| 01. | MU/NECORD/ED/01 | முல்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 90' X 25' இரண்டுமாடிக் கட்டடத்தை நிறைவு செய்தல். | 1,000 | M7 | 25,000 |
| 02. | MU/NECORD/ED/03 | முல்/சிலாவத்தை இ.த.க. பாடசாலையில் இரண்டு 110' X 25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம். | 1,000 | M7 | 35.000 |
| 03. | MU/NECORD/ED/04 | முல்/அம்பலவன் பொக்கணை அ.த.க. பாடசாலையில் 110' X 25' வகுப்பறைக் கட்டடத்தை நிறைவு செய்தல் | 1,000 | M9 | 3,000 |
| 04. | MU/NECORD/ED/05 | முல்/புதுக்குடியிருப்பு கணேஷ வித்தியாலயத்தில் மூன்று 110' X 25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம் | 1,000 | M6 | 55,000 |
| 05. | MU/NECORD/ED/17 | முல்/உடுப்புக்குளம் அ.த.க.பாடசாலையில் 120' X 25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 06. | MU/NECORD/ED/25 | முல்/முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் 110' X 25' மாடிக்கட்டடம், இரண்டு பிரிவு விஞ்ஞான ஆய்வுகூடம், 90' X 25' கட்டடத்தை நிறைவு செய்தல், 150' X 30' பிரதான கேட்போர்கூட திருத்த வேலைகள். | 1,000 | M6 | 90,000 |
| 07. | MU/NECORD/HS/04 | ஒலுமடு சித்த ஆயுள்வேத மருந்தகக் கட்டட நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 08. | MU/NECORD/LS/01 | முல்லைத்தீவு மிருக வைத்தியர் அலுவலகம், விடுதி நிர்மாணம். | 1,000 | M6 | 60,000 |
| 09. | MU/NECORD/LS/02 | ஒட்டுசுட்டான் மிருக வைத்தியர் அலுவலகம், விடுதி மீள் நிர்மாணம். | 1,000 | M6 | 60,000 |
| 10. | MU/NECORD/RD/01 | வற்றப்பளை, கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு வீதியில் 8.7 கி.மீ., 8.9 கி.மீ., 9.4 கி.மீகளில் மூன்று 6.196 மீ. நீளமான பாலங்கள் அமைத்தல் | 1,000 | M5 | 110,000 |
| 11. | MU/NECORD/AG/01 | ஒலுமடு கமநல கேந்திர நிலையம் மீள்நிர்மாணம். | 1,000 | M7 | 50,000 |
| 12. | MU/NECORD/FL/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்பது கிராமங்களில் மீனவர்களுக்கான ஓய்வு அறை கட்டுதல். | 1,000 | M7 | 50,000 |
| 13. | MU/NECORD/ID/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்களுக்கான 10அறை கொண்ட விடுதி அமைத்தல். | 1,000 | M6 | 65,000 |


3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   - I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD உடன் மேற்படி M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களை திருப்திகரமான முடித்ததுடன் கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடம் இருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடம் இருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரல் ஒன்று வழங்கப்படல் வேண்டும்.
   - IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   - VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒப்பந்த ஆவணங்களை 2003 மார்ச் 27 இலிருந்து 2003 ஏப்ரல் 10 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து, பந்தி 2இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.
7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2003 ஏப்ரல் 08 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.
8. கேள்வி முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.
9. அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2003 ஏப்ரல் 24 முற்பகல் 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுக்கு, அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**திருமதி இமெல்டா சுகுமார்**
**தலைவர், மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(C/37044)

# எரிபொருள் தட்டுப்பாடு புதிதல்லத்தான்; ஆனாலும் இப்போது நடப்பது அநியாயம்!

கடந்த 20ஆம் திகதி அன்று காலை 9.30 மணியிருக்கும்; சகல எரிபொருள் நிலையங்களிலும் "பெற்றோல் இல்லை", "மண்எண்ணெய் இல்லை", "எரிபொருள் விநியோகிக்கும் இயந்திரம்(பம்பி) பழுதடைந்து



விட்டது" என்ற அறிவித்தல் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன.

ஒரேநாளில் ஒரே நேரத்தில் குடாநாட்டின் பெரும்பாலான எரிபொருள் நிலையங்கள் 'பம்பிகள்' பழுதடைந்து போனது குடாநாட்டு மக்களை மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது.

தனது வாகனங்களுக்கு எரிபொருள்களை நிரப்பச் சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, பெரும்பாலான தனியார் கடைகளின் 'றாக்கைகளில்' கூட வெற்றுப் போத்தல்களே காணப்பட்டன. ஏனைய வர்த்தக நிலையங்கள் பலவற்றிலும் மண்எண்ணெய், பெற்றோல் கேட்டவர்களுக்கு 'இல்லை' என்றே பதில் வந்தது.

திடீரென்று எப்படி எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று பொதுமக்கள் ஆச்சரியப்பட்டனர்.

"ஈராக் சண்டை தொடங்கிவிட்டுதாம்" என்ற செய்தி பரவத் தொடங்க காரணம் புரிந்தது அவர்களுக்கு.

வானொலி சேவைகள் அனைத்தும் விசேட செய்தியாக ஈராக் போர் குறித்து சொல்லிக்கொண்டிருந்தன. உள்ளூர், வெளியூர் தொலைக்காட்சி நிலையங்களும் ஈராக் மீது அமெரிக்கா போர்தொடுத்த செய்தியை படம் போட்டுக் காட்டிக்கொண்டிருந்தன.

அதற்குப் பிறகுதான் கையில் அகப்பட்ட கொள்கலன்களுடன் எரிபொருள் நிலையங்களை நோக்கி விழுந்தடித்து ஓடத்தொடங்கினார்கள் மக்கள். ஆனால், அங்கெல்லாம் சனக்கூட்டங்களும் எண்ணெய்க் கான்களும் நிரம்பி வழிந்தனவே தவிர எரிபொருள்கள் கிடைக்கவில்லை.

மண்எண்ணெய் மருந்துக்கும் இல்லை என்றுவிட்டார்கள் அதனை விநியோகிப்பவர்கள்.... மறுநாள் சில எரிபொருள் நிலையங்களின் பம்பிகள் திருத்தப்பட்டுவிட்டன(?) 'கான்'களுடன் மக்கள் நீண்ட கியூவில் கொளுத்தும் வெய்யிலையும் பாராது கால் கடுக்க காத்துநின்றார்கள்.

மோட்டார் சைக்கிள்கள் உட்பட அனைத்து வாகனங்களும் கிலோமீற்றர் கணக்கில் வரிசையாக அடுக்கப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அன்று எரிபொருள் விநியோகம் நடந்தது. இதனால் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் பெரும்பாலும் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருமே தமது ஏனைய வேலைகள் யாவற்றையும் ஒத்திவைத்துவிட்டு எரிபொருள் நிலையங்களின் முன்னால் தவம்கிடந்தார்கள்.

ஏறக்குறைய இன்று வரைக்கும் அதே நிலைமைதான் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

## செய்திக் கட்டுரை

இப்படிக் 'கியூ'வில் நிற்பதொன்றும் குடாநாட்டு மக்களுக்கு புதிததல்ல. அவர்கள் கடந்த காலங்களிலும் மண்எண்ணெய் முதல் மா வரைக்கும், பாண்முதல் நிவாரணம் வரைக்கும் அனைத்துக்குமே முண்டியடித்து 'கியூ'வில் நின்று பழக்கப்பட்டவர்கள்தான்.

உலகின் ஏதாவது ஒரு கடற்பரப்பில் எங்காவது ஒரு மூலையில் ஓர் எண்ணெய்க் கப்பல் தகர்க்கப்பட்டுவிட்டது அல்லது மூழ்கிவிட்டது என்று கேள்விப்பட்டாலே முன்னெச்சரிக்கையாக பரல்களில் எரிபொருள்களை வாங்கி வீடுகளில் 'ஸ்ரோக்' பண்ணி பழக்கப்பட்டவர்கள் அல்லவா நம்மவர்கள்.

அப்படியிருக்க, எண்ணெய் வளநாடு ஒன்றின்மீது போர் தொடங்கிவிட்டால் சும்மா இருப்பார்களா என்ன?

இப்பொழுது குடாநாட்டில் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவதைவிட ஏற்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதே மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

"போதியளவு எரிபொருள்கள் கையிருப்பில் இருக்கின்றன. இதனைவிட இலங்கைக்கு எரிபொருள்களை ஏற்றுமதி செய்வது இந்தியன எண்ணெய்க் கூட்டுத்தாபனமே (I.O.C) தவிர ஈராக் அல்ல. எனவே எரிபொருள்களுக்கு இயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு சாத்தியமே இல்லை" என்று உறுதியாகக் கூறினார் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் ஏ.அந்தோனிப்பிள்ளை.

"பொதுமக்கள் தேவையற்ற அச்சம் காரணமாக அளவுக்கு மிஞ்சி எரிபொருள்களை வாங்கி வீடுகளில் களஞ்சியப்படுத்திவைப்பதனாலேயே செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படப்போகிறது. எனவே, இதனை பொதுமக்கள் சரியாகப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும். அளவுக்கு அதிகமாக எரிபொருளை சேமித்து செயற்கைத் தட்டுப்பாட்டிற்கு வழிகோலிவிடக் கூடாது" என்று பத்திரிகைகள் மூலம் கேட்டுக்கொண்டார் அவர்.

## அற்புதன்

ஆனால், அவரது கருத்துக்கள் எதனையும் நம்புவதற்கு குடாநாட்டு மக்கள் தயாராக இல்லை.

எதனையும் அவ்வளவு சீக்கிரம் நம்பிவிடமாட்டார்களே....!

தமது சேமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தவண்ணம்தான் இருக்கிறார்கள் யாழ்.மக்கள். மக்களுடன் மக்களாக பரல் கணக்கில் மண்எண்ணெய், பெற்றோல் என்பனவற்றை வாங்கி கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்று கொள்ளை லாபம் அடிக்க பதுக்கல் நடவடிக்கைகளிலும் சிலர் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமது கொள்ளை லாபத்துக்காக சாதாரண மக்கள் மத்தியில் எரிபொருள் நிலைவரங்கள் தொடர்பாக விஷமப் பிரசாரத்தினை மேற்கொண்டு செயற்கைக் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய மாவட்டங்களில் தற்போது எரிபொருளுக்கு இப்படியான தட்டுப்பாடு ஏற்படவில்லை.

அண்மைக்காலங்களில் குடாநாட்டில் வகைவகையான மோட்டார் சைக்கிள்கள் உட்பட அனைத்து வாகனங்களினதும் எண்ணிக்கை அதிகரித்துவிட்டிருக்கிறது. இதனால் முன்பை விட இப்பொழுது இங்கு சற்று அதிகமான எரிபொருள் தேவை ஏற்பட்டிருக்கின்றது என்பது உண்மைதான்.

ஆனால், அந்தத் தேவை, அதிகரிப்புக்கேற்ப போதியளவு எரிபொருள் கையிருப்பில் இருப்பதனால் தட்டுப்பாடு ஏற்படாது என்று




பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருக்கின்றது.

வர்த்தகப் பெருமக்களின் வியாபாரத் தந்திரங்களின் முன்னால் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளின் அறிவிப்பு எம்மாத்திரம்....

தேநீர்க்கடை ஒன்றினுள் இருந்து தேநீர் அருந்திக்கொண்டிருந்த ஒருவர் 'வீரவசனம்' பேசினார்.

"நான் 10பரல் மண்எண்ணெயும் 8 பரல் பெற்றோலும் அடிச்சு வைச்சிட்டன். எனக்கு பிரச்சினை இல்லை"

அருகில் இருந்த மற்றொருவர் கேட்டார் "உங்கட வீட்டில குளிக்




கிறதுக்கு தண்ணிக்குப் பதிலாக பெற்றோலையும் மண்எண்ணையையுமே பாவிக்கிறனீங்கள்?"

வீரம் பேசியவரின் முகம் வெளிறிப்போனது.

இவ்வாறு அளவுக்கு மிஞ்சி பரல்களில் எரிபொருள்களை வாங்கி வீடுகளில் களஞ்சியப்படுத்தும் 'புத்திஜீவி'களினால் பாதிக்கப்படுவது விவசாயிகளும் நாளாந்தம் மண்எண்ணெய் வாங்கி விளக்கெரிக்கும் வறிய மக்களுந்தான்.

தற்போது குடாநாட்டில் வெப்பநிலை மிகவும் உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டிருக்கின்றது. விவசாயப்பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவது மிகவும் பிரதானமான - தாமதிக்கப்படமுடியாத - ஒன்றாகிவிட்டது.

இதனால் உடனுக்குடன் கடையில் மண்எண்ணெய் வாங்கி நீரிறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி இறைக்கின்ற விவசாயிகள் ஒரு லீற்றர் மண்எண்ணெயை 40 ரூபாவரையில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

எனவே, இது தொடர்பான உண்மை நிலையைப் புரிந்துகொண்டு மக்கள் விழிப்படையவேண்டும். தேவையற்ற அச்சம் காரணமாக அளவுக்கு மிஞ்சிய எரிபொருள்களை மிகுந்த சிரமப்பட்டு வாங்கிச் சேகரிப்பதை உடன் நிறுத்தவேண்டும்.

ஈராக் யுத்தம் இலங்கைக்கான எரிபொருள் விநியோகத்தை அவ்வளவு விரைவில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்ற உண்மையைப் புரிந்துகொண்டு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதைப் போல அவல வாழ்க்கை வாழ்ந்துவரும் குடாநாட்டுமக்களிடம் தேவையற்ற பயப்பீதியை ஏற்படுத்தி, அதன்மூலம் சுயலாபம் தேடுவோர் அதனைக் கைவிட்டு சமூக நோக்கில் சிந்தித்து மண்எண்ணெய் போன்றவற்றை முன்னைய விலைக்கே விற்று நிலைமையைச் சீராக்க முயலவேண்டும். ★

# எமது போராட்டம் குறித்த நினைவுகளை பதிவுசெய்ய சினிமாவே சிறந்த சாதனம்!

## வவுனியா வளாக விரிவுரையாளர் உரை

யாழ்ப்பாணம்,மார்ச் 26

எமது தமிழ்ச் சமூகம் போராட்டத்தின் மூலம் அடைந்துள்ள சமூக மாற்றங்களை எதிர்காலச் சமுதாயத்துக்கு மீள நினைவுபடுத்த திரைப்படம் சிறந்த சாதனமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் சந்தையா ஸ்ரீகணேசன்.

சர்வதேச சினிமாத் தினத்தை முன்னிட்டு 'சலன சித்திரம்' அமைப்பின் அலுவலகத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைப்பின் தலைவர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் க.ஸ்ரீகணேசன் மேலும் கூறியதாவது -

சினிமா என்கின்ற சக்தி வாய்ந்த ஊடகம் அரசியல், சமூகரீதியாக பெரும் தாக்கம் செலுத்தக்கூடியது.

எமது விடுதலைப் போராட்டத்தை சில தென்னிந்தியத் தமிழ்ப் படங்களில் கையாள முற்பட்ட இயக்குநர்கள் பல தவறுகளை விட்டுள்ளனர். இவற்றை நிவர்த்தி செய்வதற்கு எமது கலைஞர்கள் முயற்சிக்க வேண்டும். முழு நீளத் திரைப்படங்ளைச் செய்வதற்கு முன்னர் குறும்பட முயற்சிகளில் ஈடுபடுவது பயனைத் தரும். செயற்பாட்டு ரீதியாகவும், கலைத்துவ ரீதியாகவும் முன்னேற்றம் காண்பதற்கு குறும்படங்கள் களமாக அமையும்.

- இவ்வாறு க.ஸ்ரீகணேசன் தெரிவித்தார்.

சுவிற்ஸர்லாந்தில் குறும்படங்களைத் தயாரித்துவரும் இயக்குநர் த.பாலகுமார் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள நாம், எமது சொந்த அடையாளங்களை இழந்தவர்களாக - பல சோகங்களுக்கு முகங்கொடுத்து-வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு 'சினிமா' சிறந்த பதிவாக இருக்கிறது. எமது கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் தாயக உணர்வு போன்றன அங்கே தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஏடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- இவ்வாறு த.பாலகுமார் தெரிவித்தார். இந்நிகழ்வில் குறும்படக் காட்சிகளும் கலந்துரையாடலும் இடம்பெற்றன. (ஒ-9)



கராச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்துக்கு பண்டம் எடுக்கும் நிகழ்வு யுத்த சூழ்நலை காரணமாக கடந்த சில வருடங்களாக இடம்பெறவில்லை.

ஏ-9 பாதை திறந்ததையடுத்து இவ்வருடம் தென்மராட்சியின் மீசாலை வரை பண்டம் எடுக்க கூடார வண்டில்களில் வந்தோரை படத்தில் காணலாம். *(படம்: ஏ.வீ.எம்., கொடிகாமம்)*

# யாழ். மண்ணுக்கு இப்போது இது தேவைதானா?

இப்போதெல்லாம் யாழ்ப்பாணம் எதைபெதையெல்லாமோ தின்று உப்பிப் பெருத்து 'செமியாக்குணத்துடன்' உடலைக் கெடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. ஏ-9இன் குண்டு குழிகளை எல்லாம் தாண்டி மிகவும் பிரயத்தனப்பட்டு எவ்வெவரெல்லாமோ பாயந்துவந்து யாழ்ப்பாணத்தில் தங்கள் விலாசம் ஒட்டுகிறார்கள். பல புதுமைகளைக் கொண்டுவந்து கொட்டுகிறார்கள்.

இவ்வளவ காலமும் எதுவும் அசையாமல் கலையும் சிந்தனையும் கூட வளராமல் இருந்திருக்கிறதே என்பது அவர்கள் கண்டுபிடித்திருக்கும் புதுப்பிரச்சினைகளில் ஒன்று. இவர்களின் உள்நுழைவிற்கு இங்குள்ள பலர் எதுவித தேசாபிமான சிந்தனையுமின்றி தரகுமுகவர்களாக தொழிற்படுவதுதான் மிகவும் வேதனைதரும் விடயம்.

'போரை நிறுத்தி மூச்சு வாங்கும் இந்த இடைவெளியில் கலாசாரப்போர் ஆரம்பித்துவிடும் போன்று தோன்றுகின்றது. பிரித்தானியரின் காலனித்துவக் கண்கள் இன்னமும் எம்மை விட்டு விலகாததன் வெளிப்பாடே தரகு முகவர்கள்மூலம் பண முதன்மைப்படுத்தலின் ஆதிக்கத்தோடு நாகுக்காக தம் கைகளில் எம்மை ஏந்தப் பார்ப்பது அமைகிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை 6.30மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் ஓர் ஆற்றுகை, பிரிட்டிஷ கவுன்சிலின் வழிகாட்டலில் திருமறைக் கலாமன்றம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. இப்போது இந்நிகழ்வின் பிரதிபலிப்பாக பெரும் எதிர்ப்பலை யாழ்ப்பாணத்தின் பல்வேறு சிந்தனையாளர்களிடமும் கிளம்பியிருக்கிறது. இந்து, கிறிஸ்தவ மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வைக் குழப்பும் ஒரு நடவடிக்கையாக இது அமைந்துவிடுமோ என்று அவர்கள் ஆதங்கப்படுகின்றனர். அதற்கு ஏற்புடையதான சில காரணிகளும் அங்கு அமைந்திருக்கத்தான் செய்கிறது.

இவ்வாற்றுகையை நிகழ்த்திய ராணிமூர்த்தி, மலேசியாவைப் பிறப்பிடமாகக்கொண்டு பல நாடுகளிலும் வசித்து லண்டனில் திருமணமானவர். இந்துவாக வாழ்ந்து மதம் மாறியவர். இவரது தனி நடிப்பாகவே ஆற்றுகை அமைந்திருந்தது. எனினும், அவர் எவ்வளவு சரியாகப் பாத்திரங்களை உள்வாங்கி நடித்தார்? என்பதில் பல விமர்சனக் கருத்துக்கள் உள்ளன. இந்துமதக் கொள்கைகளையும் சடங்குகளையும் மிகக் கடுமையாக விமர்சித்தது இந்த ஆற்றுகை.

மதம் மாறிய ஒருவரின் மனநிலை ஒரு சமயத்தைத் தூற்றுவதற்கு ஏற்புடையதா என்பதும் கேள்விக்குரியது. தனது தனிப்பட்ட கருத்தை ஒரு சமயத்தின் மீது பொதுமைப்படுத்திக் கிண்டலடிப்பது வரவேற்கத்தக்கதல்ல.

எமது மக்களுக்கு புதிய அரங்க முறை மற்றும் அரங்கின் தொழில் நுட்ப வளர்ச்சிகளைக் காட்டுவதைத் தவிர வேறு உள்நோக்கங்கள் எதுவும் இருக்கவில்லை என்கின்றனர் நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியவர்கள். ஆனால், அதனை யாழ்ப்பாணத்தின் அரங்க வல்லுநர்கள் மறுக்கின்றனர். இதில் எதுவுமே யாழ்ப்பாணத்திற்குப் புதிதல்ல. 1954 லேயே 'வையத்துள் தெய்வம்' என்ற நாடகத்தில் இத்தகைய முறை பாவிக்கப்பட்டுவிட்டது என்ற வாதத்தினை அவர்கள் முன்வைக்கிறார்கள்.

நம்பிக்கையை, மனச்சாட்சியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் மக்களிடம் அவை பற்றிக் கிண்டலடிக்கும் தொனியில் அரங்கு என்ற கௌரவமான சட்டைக்குள் புகுந்துகொண்டு பேசுவது கண்டிக்கப்படவேண்டிய ஒன்று. நாவலர் பெயரில் அமைந்த மண்டபத்தில் விபூதி பற்றியே நையாண்டி செய்தது பெரும் சிக்கலை உருவாக்கிவிட்டுள்ளது. ஒரு சமயத்தை, அதன சடங்குகளைப் பின்பற்றுபவர்களை நீங்கள் உலகின் முதல் மூடர்கள் என்றும், இன்னும் ஆங்கிலத்தின் மிக மோசமான வார்த்தைப் பிரயோகங்களால் குறிப்பிடுவதும் கடும் எதிர்ப்புக்குரிய காரணிகளாகும்.

உண்மையில் யாழ்.சமூகத்திற்கு இது பிற்போக்கான சபை குழப்பிகளின் இரண்டாவது பிரவேசம். முதலில் ஏ.வி.எம்.ராஜன் - புஸ்பலதா தம்பதியினரின் மதமாற்றப் பிரசார நுழைவு. அவர்களது கிண்டலடிப்புக்கு யாழ்.சமூகம் ஒன்றிணைந்து கடுங்குரலெழுப்பியது. இப்போது ராணி மூர்த்தியின் உள்நுழைவு. கிறிஸ்தவ அமைப்புக்கள் இவ்வாறானவர்களை அழைக்கும்போது எமது தேசம் மத ஒற்றுமை பற்றி மிகவும் கவனமாய் இருக்கவேண்டியது அவர்களது பாரிய பொறுப்பாகும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணம் மத சகிப்புத்தன்மை என்பதைக் காட்டிலும் மத ஏற்புடைமையைக் கொண்டிருக்கும் ஒரு பிரதேசம் என்றால் மிகையல்ல.

ஆற்றுகை பெரும் சர்ச்சையை ஏற்படுத்திவிடவே, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தடல்புடலாக, இலக்கின்றி ஒரு கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

ராணிமூர்த்தியை அழைத்து வந்தவர்களின் வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகவே இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

உரிய நேரத்திற்கு ராணிமூர்த்தி மண்டபத்துக்கு வரவில்லை என்பதும் கலந்துரையாடும் நேரத்தை மிகக் குறுகியதாகக் கட்டுப்படுத்தியதும் கலந்துரையாடல், யாழ். மக்களின் கருத்து நிலை என்பவற்றில் அவர் கொண்டிருந்த மதிப்பின் அளவு தெளிவாகிறது. இங்கு சபையிலிருந்த இருவரைத் தவிர பலரும் ஏற்பாட்டாளர்களே. அழைக்கப்பட்டிருக்க வேண்டிய இந்து அறிஞர்களோ, ஆற்றுகைத்துறை சார்ந்த முக்கியஸ்தர்களோ அழைக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் இங்கு கலந்துரையாடலின் நேர்த்தியைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

இதைவிட, இதிகாச புராணங்களைப் பற்றிய அறிவு பூரணமாக ராணிமூர்த்தியிடம் இல்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. பாடசாலைப் புத்தகங்களில் தான் இக்கதைகளை அறிந்ததாக அவர் கூறினார் எனின், பாடசாலைப் புத்தகங்களால் மட்டும் இந்துதத்துவ அறிவு முழுமையாக் அவருக்குக் கிடைத்ததா?

"அது பெரிய ஒரு துறை; நீங்கள் அவற்றை தத்துவ ரீதியில் கற்றுணர வேண்டும்" என ஒரு கிறிஸ்தவ மதகுரு அங்கு சுட்டிக் காட்டியதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இந்து தத்துவ அறிவின்றியே ராணி மூர்த்தி சடங்குகள் பற்றிய வாதத்திற்குப் புறப்பட்டிருக்கிறார் என்பதும் தெளிவாகிறது.

சடங்குகளில் சில மூட நம்பிக்கையானவையாக இருந்திருப்பினும் இவர் கூறிய சடங்குகள் யாழ்ப்பாணத்தில் இப்போது வழக்கிழந்துவிட்டன. இந்திய சினிமாக்களில் காட்டப்படும் சில குறைபாடுகளையே இவர் சுட்டிக்காட்டி அவை எம்மிடம் உள்ளதாகக் குறிப்பிட முனைகிறார். அவர் பார்வையில் இவை இன்னமும் இங்கே இருக்கின்றன என்றே வைத்துக்கொண்டாலும் மேலை நாடுகளில், அதுவும் அந்நியருக்கு இவ்வாற்றுகை நிகழ்த்தப்படுவதன் நோக்கமென்ன?

நமது கலாசாரத்தின் குறைபாடுகளை வேற்று நாட்டவர்களுக்குச் சொல்வதனால் பயனென்ன?

உண்மையில் சடங்குகள் பற்றி மக்கள் தெளிவு பெறவேண்டும் என ராணிமூர்த்தி நினைத்திருந்தால் இங்கேயே இதனை செய்து வரலாமே? மக்களுடன் கலந்துரையாடும் பாங்கில் அரங்கை அமைத்திருக்கலாமே? இது எமது ஆதங்கம்.

சடங்குகள் அர்த்தமற்றவை; விலக்கப்பட வேண்டியவை என்ற பார்வையில் கூறவந்த இவர், சடங்குகளில் இருந்து தான் விலகுவதை குறியீடு மூலம் உணர்த்த விரும்பி தலையில் ஒரு செம்பு தண்ணீரை ஊற்றிக் கொண்டு, "பூஜா ஒழிந்துவிட்டாள்" என்று கத்துகிறார். அதாவது, பூஜா என்கிற இந்துமதச் சடங்குகளை அவள் தலைமுழுகிவிட்டாள் என்றாகிறது. இங்கு அவரது சடங்கு பற்றிய நிலைப்பாடு எம்மை நகைக்க வைக்கிறது. அதாவது, தலை முழுகுதல் என்ற சடங்கை அவர் அங்கு நிகழ்த்திக் காட்டினார். தனது கருத்தின் அடித்தளத்திலேயே ராணி மூர்த்தி தெளிவின்றி இருக்கிறார் என்றே கொள்ளவேண்டும். இதுமட்டுமன்றி

கு.லக்ஷ்மணன்
யாழ். பல்கலைக்கழக மாணவன்.

கலந்துரையாடலில் அவர் கண்கலங்கியதும் அவரது நிலைப்பாட்டின் தளம்பல் தன்மைக்கு சாட்சி சொல்கிறது.

கலந்துரையாடலின் இறுதியில் ஒருவர் எழுந்து "நீங்கள் கூறியது மிகவும் உண்மை; அற்புதமானது. எல்லோரும் அதனை ஏற்கிறோம். இவர்களிற சிலர் அறியாமல் கதைக்கிறார்கள் அவர்களுக்காக நான் உங்களிடம் வருத்தம் தெரிவிக்கிறேன்" என்று தன் ஆங்கிலப் புலமையை உறுதிப்படுத்தினார். அப்போதுதான் தெரிந்தது வருந்துவதாகக்கூட சிலர் பாராட்டி வாழ்த்துகிறார்கள் என்று. இன்னமும் அடிவருடும் பண்பு நம் சமூகத்திலிருந்து தூக்கி எறியப்படாதது ஓர் அவமானமே.

இறுதியாக நாம் கேட்டுக்கொள்வது எந்தத் தேசத்திலாவது யாராவது உங்கள் மனவிருப்புக்கள்படி வாழுங்கள். நாம் அதை விமர்சிக்கவில்லை. ஆனால், நாம் வாழ்ந்து பெற்றபேறுகளை எம் வாழ்க்கையின் ஆத்மார்த்தமான மனக் கட்டமைப்பைக் கிண்டல் செய்யாதீர்கள். அதற்கு உங்களுக்கு உரிமையும் இல்லை. உங்களைப் போல் வாழ வேண்டும் என்று எந்தத் திணிப்பையும் எம்மீது செய்யாதீர்கள்; அது ஏற்கமுடியாதது.




## துயர் பகிர்கின்றோம்

எமது கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்
திரு.சோ.ஞானசுந்தரம் அவர்களின் அன்புத் தந்தையார்

### சோமசுந்தரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, பிராந்திய காரியாலயம். (15974) பிராந்திய முகாமையாளரும், அனைத்து பணியாளர்களும்.

## தேவை

1) Trained Nurses
2) பெண் மருந்து விற்பனையாளர்
3) தாதிப் பயிற்சி பெற விரும்புபவர்கள் ஆகியோர் தேவை.

தொடர்பு :
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்,
08, இராமையாச் செட்டியார் வீதி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்).
(15947)

## சிங்களம் மல்வான

வழிகாட்டல் ஆசிரியர்

மூன்றே மாதங்களில் நீங்களும் சிங்கள மொழியைத் தெளிவாகப் பேச, எழுத, வாசிக்க முடியும்.
புதிய ஆரம்ப வகுப்புகளுக்கு இன்றுமுதல் சேரலாம்.
கிழமைகளில் எல்லா நாள்களிலும் காலை 7.00 மணிமுதல் இரவு 10.00மணி வரை வகுப்புகள் நடைபெறும்.
வாரம் இரண்டு நாள்கள், மூன்று நாள்கள் கொண்ட 1 மணித்தியால வகுப்புகள். வசதியான நேரங்களைத் தெரிவுசெய்யலாம்.
விவரங்களுக்கு:- Miss R.NITHARSINI
OFF STANLEY ROAD, SIRAMPIYADY LANE, JAFFNA.
(Gozee Restaurant அருகில்). (15966)

## O.E.T.C

தட்டச்சுக்கள், றோணியோ இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் திருத்தும் செய்தல், விற்பனை, கொள்வனவு செய்தல.
கணனி, றோணியோ போட்டோக் கொப்பி பிரதிகள்.
தட்டச்சு, றோணியோ உதிரிப் பாகங்கள் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
330, K.K.S. ROAD, JAFFNA.
T.P. : 0777 102492, 026 23176
(15956)

## பருத்தித்துறை புலோலி
## மருதடி குருமணல் கந்தசுவாமி கோயில்

48ஆம் நாள் மண்டலாபிஷேக பூர்த்திவிழாவும்
பிரதம சிவாச்சாரியார் பாராட்டுதலும்

இன்று (26.03.2003) புதன்கிழமை 1008 சங்காபிஷேகம் இடம்பெறும். மாலை 5மணியளவில் மங்கள இசைவாத்தியம் இசை முழங்க அழகிய பூந்தண்டிகையில் விநாயகர், முருகன், வள்ளி தெய்வானையுடன் வீதி உலா வந்து அனைவருக்கும் அருள்பாலிப்பார்.

கிரியைகள் யாவையும் வெகு சிறப்பாக நடத்திய பிரம்மஸ்ரீ துரை வாசுதேவக் குருக்கள் அவர்களைப் பாராட்டி மகிழ்கின்றோம்.

வாழி

தேக நிறை பிராம்மண ரூபம் தோன்றும்
தெய்வீக பக்தியொளி முகத்தில் தோன்றும்
பேசு குரல் மதுரவன் இனிமை தோன்றும்
குருமணல் கந்தசுவாமி மீது பக்தி தோன்றும்
அந்தண பெருகுல மகனும் வாசுதேவகுருவும் செய்த
பெருஞ் சேவை பக்தருளம் களித்தே தோன்றும்
வீசும் அருள் குருமணல் கந்தசுவாமி
விளங்க அருள் வாசு தேவக்குருக்கள் வாழி வாழி.

அனைவருக்கும் முருகப்பெருமான் திருவருள் கிடைக்க வேண்டுகின்றோம்.

வாழ்த்தி அருள் ஆசி குரு ஆசி வேண்டி நிற்கும்:-
பா.சிவநேசன் குடும்பம்
சிவஜோதி நகைமாளிகை,
கஜானி ஜுவலரி,
விஸ்வபிரம்ம குருக்கள்,
விஸ்வகுல வீதி,
பருத்தித்துறை.

திரு. திருமதி கிருஷ்ணபிள்ளை குடும்பம்
(மாலுசந்தி)
திருமாலன் நகைத்தொழிலகம்
தர்மகுலசிங்கம். (15961)

உ
ஸ்ரீகாமாக்ஷி துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் பங்குனிமாதம் 13ஆம் நாள் நாளை (27.03.2003) வியாழக்கிழமை பகல் 12.00 மணிமுதல் 1.30மணிவரையுள்ள உத்தராட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
இரத்தினகோபால்
(கிராமசேவை அலுவலர்)

எமது கனிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
ஜெயந்தினி
(ஆசிரியை)

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிர்ணயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: 31.03.2003 திங்கட்கிழமை மாலை 3.00 மணிமுதல் மணமகன இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி இரத்தினம்
4ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.
திரு.பொ.சோதிலிங்கம் (தாய்மாமன்)
19/1, அரசடி லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு) (15958)


திரு.திருமதி செல்வராஜா
712, காங்கேசன்துறை வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

# BOXER

*கண்கவர் தோற்றம், சிக்கனம்*
*மற்றும் உயர்தொழில்நுட்பத்தில்*
*என்றும் முன்னணியில்*

இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள உங்களுக்கான சிறந்த முதலீடு BOXER.

நம்பிக்கை மற்றும் தரத்திற்குப் பெயர் போன நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் BOXER உங்கள் தெரிவுக்கேற்ற மோட்டார் சைக்கிளாக இருப்பதால் மேலும் சிறந்த வளம் மிக்க எதிர்காலத்திற்கு இதிலே சவாரி செய்யுங்கள்.



இப்போது BOXER CT DX மேம்பாடான சக்திக்கும் எரிபொருள் சிக்கனத்திற்கும் K-tec தொழில்நுற்பவியல் சகிதம்.

Boxer CT - ரூபா. 68,568/-
Boxer AT - ரூபா. 64,200/-
Boxer CT DX - ரூபா. 71,526/-
மேற்படி விலைகள்
பெசேவரி புற நீங்கலானவை

**விசேட கொடுப்பனவு!**

ICC கிரிக்கட் போட்டியை முன்னிட்டு பெப். 5 முதல் மார். 23 வரை நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பஜாஜ் மோட்டார் சைக்கிளுடனும் ஹெல்மட், ஜக்கட் மற்றும் ரைடர் Bag ஒன்று இலவசம்.

இந்த கொடுப்பனவு எப்ரல் 15,2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது

**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

**தன்னிகரற்ற உத்தரவாதம்**

- சக்திவாய்ந்த4 ஸ்ட்ரோக் 100cc என்ஜின் - K-tec தொழில்நுட்பவியலை பக்கபலமாக கொண்டு 7.02-7.7 BHP வரை அபாரமான செயற்திறன் கொண்டது.
- கரடு முரபான பாதைப் பயணத்துக்கு உறுதிவாய்ந்த வலுப்படுத்தப்பட்ட டபிள் கிரேடில் அடிச்சட்டகம்.
- பாதுகாப்பான சவாரிக்கு சக்திவாய்ந்த 35/35W முன்விளக்கு.
- இப்போது சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 91 கி.மீ ஓடக்கூடிய எரிபொருள் சிக்கனம் கொண்டது.

**Boxer இப்போது AT, CT மற்றும் CT Deluxe மாதிரிகளில்.**

## DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 074-700677, 687175 ஹொட்லைன் : 074-715050

**அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள் :** குறிஞ்சி ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 0777-626919
குறிஞ்சி ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி. தொலைபேசி : 0777-626919

Mel Ads

# வவுனியாவிலிருந்து நோயாளர்கள் யாழ். மருத்துவமனையில் அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்26

ஏ-9 வீதி பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டதையடுத்து முதல் தடவையாக நேற்றுமுன்தினம் வவுனியா வைத்தியசாலையிலிருந்து நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இடுப்புக்குக்கீழ் செயலிழந்த நிலையில் உள்ள மூன்று நோயாளிகள் இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளனர்.

முன்னர் வவுனியா, மன்னார் வைத்தியசாலைகளில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்கள் அநுராதபுரம் வைத்தியசாலைக்கே அனுப்பி வைக்கப்பட்டனர்.

பாதை திறக்கப்பட்டதை அடுத்து வவுனியா வைத்தியசாலை நோயாளர்கள் யாழ்போதனா வைத்தியசாலைக்கே அனுப்பப்படவேண்டும் என்ற அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய இந்நோயாளர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (ஒ-15)

## பாடசாலை அதிபர்களுக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்26

ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து 'நிப்போன்' புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இரண்டாவது கட்ட நிதியினை உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு மேற்படி திட்டத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளராகச் செயற்படும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

பரிசில் நிதி உரிய மாணவருக்கு வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தும் பணவுறுதிச் சீட்டுக்கள் நாளை 27 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் ஒப்படைக்கவேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள உடன்வந்து உரிய மாணவருக்கு புலமைப் பரிசில் கிடைப்பதை உறுதிப் படுத்திக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-ரி)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு

மண்டைதீவு,மார்ச்26

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான சிறுகதைப் போட்டி ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடத்துகிறது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அனைவரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாம் என்றும் -

தரம் 2இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சுற்றாடலில் வாழும் பிராணிகளின் நடத்தைகள் மூலம் நற்பண்புகளைப் புகட்டும் வகையில் சிறுகதையின் கருப்பொருள் அமைந்திருக்க வேண்டும் என்றும் -

வலய மட்டத்தில் முதல் ஐந்து இடங்களைப் பெறும் சிறுகதைகள் மாகாணமட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் -

கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஒ88)

## மண்டைதீவில் சுகாதார நிலையம்

மண்டைதீவு,மார்ச்26

நீண்டகாலமாக ஆரம்ப சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படாத மண்டைதீவுக் கிராமப் பகுதியில் ஆரம்ப சுகாதார அலகு ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாக தீவக வைத்திய சுகாதாரப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். கர்ப்பிணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்து இப்பகுதி மக்கள விடுத்த கோரிக்கையின் பயனாக அடுத்த மாதம் இந்த நிலையத்தைத திறந்துவைப்பதற்கான ஒழுங்குகளை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர். (ஒ-88)

## எலுமிச்சை குறித்த பயிற்சி வகுப்பு

வலி.வடக்கு,மார்ச்26

எலுமிச்சம்பழப் பயன்பாட்டை அதிகரித்தல் சம்பந்தமான பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

ஆர்வம் உள்ளவர்களை இதில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஒ-86)


### பாராட்டி வாழ்த்துகிறோம்



தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்ற
அல்லாரை J/322 பிரிவு
கிராம உத்தியோகத்தர்
**திரு. தி.மகாலிங்கம்**
அவர்களின் சேவை சிறப்புற
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*அல்லாரை தெற்கு, மீசாலை.* - அல்லாரை தெற்கு வாழ் மக்கள். (15979)

### பாராட்டி வாழ்த்துகிறோம்



மாண்புமிகு இந்து கலாசார அமைச்சர்
**தி.மகேஸ்வரன்**
அவர்களால் 22.03.2003 அன்று சங்கானை பாலவைரவர் ஆலயத்திற்கு முதற்கட்ட நன்கொடையாக ரூபா ஒரு லட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எம்மண்ணில் சிறந்த சேவையாற்ற பாலவைரவர் அருள் புரியவேண்டுமெனவும் பிரார்த்திக்கிறோம்.

(15973) - ஆலய பரிபாலனசபையினர்.

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு
### கற்குளி கந்தசாமி கோவில்
பஞ்சகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் பங்குனித்திங்கள் 13ஆம் நாள் நாளை (27.03.2003) வியாழக்கிழமை அதிகாலை 6 மணி முதல் 7 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

சிவாகம கிரியா தத்துவ நிதி பிரதிஷ்டாகுரு
**பிரம்ம ஸ்ரீ சோ.கௌரீஸ்வரக் குருக்கள்** (நவாலி)

பங்குனித்திங்கள் 12 ஆம் நாள் இன்று (26.03.2003) புதன்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

(சி-37099) - *ஆலய நிர்வாக சபையினர்.*

### புறொயிலர் விற்பனைக்கு
புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு.
* உயிருடன 1Kg - 120/=
* சுத்தம் செய்யப்பட்டது 1Kg - 190/=

*தொடர்பு: சிவா*
இராமலிங்கம் றோட், முடமாவடி. (15982)

### விற்பனைக்கு
Motorola தொலைபேசி ஒன்று விற்பனைக்கு உண்டு.
**Jeeva Stores**
*K.K.S. Road, Mallagam.* (15977)

### புவியியல்
**G.A.Q., B.A. I, II PAPER CLASS.**
ஆரம்பம் 29.03.2003 சனி
நியூட்டன்~யாழ்நகர்
நேரம்:- மு.ப. 9.00மணி
ஆசிரியர்:- K.கிரிதரன்
B.A.(Hons),Geo.Spl.
A/L - 2004, 2005 புவியியல் வகுப்புகள் நடைபெறுகின்றன. (15971)

### தேவை
வீட்டுப் பணிப்பெண் தேவை.
நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
தொடர்பு:-
ஐ.மகேந்திரம்
வாணி தொலைத் தொடர்பு நிலையம்
பலாலி றோட், ஊரெழு.
(15962) 0777 - 732561

### நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்
எம்மை பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சித்தியெய்த வைத்த ஆசான்கள் சிரேஷ்ட விரிவுரையாளர்
**கு.சண்முகநாதன் (B.Ed., M.A.Ed.)**
அவர்கள் (மானிப்பாய் இந்துக் கல்லூரி நிலையம்) ஏனைய விரிவுரையாளர்களுக்கும் எமது நன்றியதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.
இணுவை ஆசிரிய மாணவர்கள்
திரு. ப.கலையரசன். திரு. மு.முருகவேள். திரு. மு.சரவணபவன். (15981)

### வழிகாட்டல் கருத்தரங்கு
தமிழ் மாணவர் ஒன்றியமும், வணிக மாணவ மன்றமும் இணைந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் க.பொ.த (உ/த) 2003 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு, எதிர்வரும் 27.03.2003, 28.03.2003 ஆகிய இரு தினங்களும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளதால் தவறாது அனைத்து மாணவர்களையும் கலந்து பயன்பெறும்வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம் :- யாழ்/மத்திய கல்லூரி (தம்பர் மண்டபம்)
காலம் :- வியாழன், வெள்ளி (27,28.03.2003)
நேரம் :- காலை 9 மணி
☆ வழிகாட்டல் கருத்தரங்கில் பாடங்களுக்குரிய வினா - விடைக் கொத்துகள் இலவசமாக வழங்கப்படும்.

விளம்பர அனுசரணை:-
**CAREER.COM. INSTITUTE**
**NO.70, MAIN STREET, JAFFNA.**
(C/27006)

உ
## விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 13ஆம் நாள் (27.03.2003) வியாழக்கிழமை உத்தராட நட்சத்திரமும் சித்தயோகமும் தசமித் திதியும் கூடிய காலை 10.54 மணி முதல் 12 மணி வரையுள்ள மிதுனலக்ன சுபமுகூர்த்த வேளையில்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில்
பிரதமகுரு சிவஸ்ரீ
சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்
தம்பதிகளின் ஜேஷ்ட புதல்வன்
**பிரம்மஸ்ரீ கிருபாஹரசர்மாவுக்கு**
(கண்ணன்).
(கிருபாஹர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொக்குவில் - புதுக்கோவில்)



நீர்வேலி சிறுப்பிட்டி தெற்கு
செல்லப்பிள்ளையார் கோவில்
பிரம்மஸ்ரீ பா.சதாசிவசர்மா
தம்பதிகளின் புதல்வி
**சௌபாக்கியவதி சங்கீதாவை**
(கீதா)

இறையருள் துணையுடன் மணமகள் இல்லத்தில் கன்னிகாதான திருமாங்கல்யதாரண, பாணிக் கிரஹணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் - 27.03.2003 மணமகன் இல்லத்தில் காலை 6.00 மணிமுதல் 9.00 மணிவரை.
வதூவரகிருஹப் பிரவேசம் - அன்று மாலை 4.30 மணி.
வரவேற்பு - மணமகன் இல்லம் - 28.03.2003 மாலை 3.00 மணி.

தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் - சுகந்தி தம்பதிகள்
வீரபத்திர சுவாமி கோவில்.
கோப்பாய்.

திருமதி பாலசௌந்தரி சதாசிவசர்மா
பிரம்மஸ்ரீ ச.உமாசுதசர்மா (சகோதரன்)
செல்லப்பிள்ளையார் கோவில்.
சிறுப்பிட்டி தெற்கு. நீர்வேலி.

(15978) (இருவீட்டார் அழைப்பு)


## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி தம்பிஐயா

கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தம்பிஐயா நேற்று (25.03.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - சரஸ்வதிப்பிள்ளை தம்பதிகளின அன்பு மகனும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினசாமி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாவதியின் அன்புக் கணவரும், தமிழேந்தி (ஆசிரிய கலாசாலை, கோப்பாய்), றமேஷ் (சுவிஸ்), சுரேஸ் (சுவிஸ்), திருமகள் (இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்ணன் (கொழும்பு), வசந்தினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் சிந்துஜா, சிந்துஜன், சியாம் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் வீரசிங்கம் சிதம்பரப்பிள்ளை (சுவிஸ்), கமலாம்பிகை (ஜேர்மனி), கனகசபை, அன்னலிங்கம் (சுவிஸ்), விவேகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.03.2003) புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டைபறித்தான் சோனகம்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தை ஒழுங்கை, கொடிகாமம்.* (15983) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி தளையசிங்கம் பராசக்தி

நாவற்குழியைப் பிறப்பிடமாகக்கொண்ட தளையசிங்கம் பராசக்தி 24.03.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சுந்தரம் தம்பதியினரின் அன்பு மருமகளும் தளையசிங்கத்தின் அன்பு மனைவியும் நந்தரூபி (யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவம் முதலாம் வருட மாணவி) அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாஞ்சாட்சரம் மற்றும் பரமேஸ்வரி, பரஞ்சோதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் கந்தையா, பத்மினி எதிர்மனசிங்கம், அமுதமணி, சந்திரா, கருணாநிதி, சர்வேஸ்வரி, சின்னராசா ஆகியோரின் மைத்துனியும் சதீஸ்குமார், தினேஸ்குமார், கிருபாலினியின் அருமைச் சித்தியும் பிரபாலினி, பிரதீபன் ஆகியோரின் மாமியாரும் இளங்கோ, இளங்கீரன், இளந்திரயன், இளஞ்செழியன், இளவதனி, சத்தியவாணி, பிரதீபன், தயாளினி, செல்வி சூர்யா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2003) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

*நாவற்குழி, கைதடி.* (15975)
தகவல்:
த.தளையசிங்கம் (கணவர்),
த.நந்தரூபி (மகள்).

அரசிடமிருந்து 'ரெலோ' பணம் வாங்கவேயில்லை:

# அனுபவமுள்ள ஆனந்தசங்கரி ஆதாரத்துடன் பேச வேண்டும்!

## அடைக்கலநாதன் எம்.பி. பதிலடி

வவுனியா,மார்ச்26

அரசிடம் இருந்து 'ரெலோ' அமைப்பு பணம் வாங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரியும் ந.ரவிராஜும் குற்றஞ்சாட்டியிருந்தனர். இக்குற்றச்சாட்டை நாடாளுமன்ற 'ரெலோ' உறுப்பினர் குழுவின் தலைவர் அ. அடைக்கலநாதன் எம்.பி. நிராகரித்துள்ளார். அனுபவமுள்ள மூத்த அரசியல்வாதிகள் ஆதாரமின்றி எதனையும் பேசக்கூடாதென்றும் அவர் பதிலடி கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக அ.அடைக்கலநாதன் எம்.பி.வெளியிட்ட மறுப்பறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கூட்டமைப்பின் மூத்த தலைவர் ஆனந்தசங்கரி மற்றும் ரவிராஜ் ஆகியோர் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) அரசிடம் பணம் வாங்குவதாக குற்றஞ்சாட்டியிருக்கின்றார்கள்.

ஆளும் கட்சி அமைச்சரான மகேஸ்வரனும் இதே குற்றச்சாட்டைக் கூறியதற்கு அவருக்கு இருவாரகால அவகாசம் கொடுக்கப்பட்டது எம்மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு. அவர் இதுவரை எந்தவித ஆதாரத்தையும் முன்வைக்கவில்லை. இதனால் அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்காக சட்டத்தரணிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்விடயம் இப்படி இருக்க, கூட்டமைப்பில் இருக்கின்ற எம்மை அக்கூட்டமைப்பின் மூத்த கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரி மற்றும் ரவிராஜ் ஆகியோர் மீண்டும் பொறுப்பற்ற முறையில் பேசியிருப்பது எமக்கு வேதனையையும் அதிர்ச்சியையும் அளித்திருக்கின்றது. ஓர் அனுபவமுள்ள மூத்த அரசியல் தலைவராகிய இவர், இதை ஆதாரத்துடன் பேசியிருக்க வேண்டும். அதைவிடுத்து மகேஸ்வரனின் கூற்றை மேற்கோள்காட்டி எம்மைப் பார்த்து நாம் அரசிடம் பணம் வாங்குகிறோம் என்று கூறியிருப்பது கவலையையும் வேதனையையும் அளிக்கிறது. நாங்கள் இன்றும் சொல்கின்றோம், என்றும் சொல்வோம் தனிநபராகவோ, கூட்டாகவோ நாம் அரசிடம் பணம் பெறவில்லை. இதை அவர்கள் நிரூபித்தாகவேண்டும் அது தான் பண்பானவர்களுக்கு எடுத்துக்காட்டு. இந்த அரசிடமோ, கடந்த அரசிடமோ நாம் கடமைப்படவில்லை. எப்போதும் எந்த நேரத்திலும் இந்த அரசை எதிர்க்க நாம் தயங்கமாட்டோம் என்பதை கூறிக்கொண்டு, இதற்கான ஆதாரங்களை வெளியிடுமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஓ)

யாழ். முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள

# ஐஸ் தொழிற்சாலையை இயக்க படைத்தரப்பு அனுமதி மறுப்பு!

## சமாசத் தலைவர் விசனம்

யாழ்ப்பாணம்,மார்ச்26

யாழ்.முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையின் பணிகள் யாவும் படையினரின் உத்தரவின்பேரில் நிறுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி வரையும் வழமைபோன்று பணிகள் நடைபெற்றதாகவும் -

ஆனால், கடந்த 12 ஆம் திகதி காலையில் ஊழியர்கள் பணிக்குச் சென்றபோது அப்பகுதியில் நின்ற படையினர் தொழிற்சாலையில் பணிகளை மேற்கொள்ளவேண்டாம் என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டதாகவும் - தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகால யுத்த சூழ்நிலையின் பின்பு இத்தொழிற்சாலையை மீளவும் இயக்குவதற்கான அனுமதியைப் படைத்தரப்பினரிடம் கேட்டபொழுது அதற்கான அனுமதியை அவர்கள் வழங்கியிருந்தனர். ஆனால், தற்பொழுது படையினரின் இச்செயறபாடு குறித்து 512ஆவது படையணியின் அதிகாரியிடம் தெரிவித்தபோது அவரும் தொழிற்சாலை அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் வருவதால் தொழிற்சாலையில் பணிகள் மேற்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

இதனால் அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் தமது வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர். அத்துடன் தொழில் உபகரணங்களும் அங்கு முடங்கிப் போயுள்ளன. யாழ்.குடாநாட்டின் 25 வீதமான ஐஸ் தேவையைப் பூர்த்தி செய்துவந்த இத்தொழிற்சாலையின் உற்பத்தி நிறுத்தப்பட்டதால் மீனவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர் என்று அவர் சொன்னார்.

இத்தொழிற்சாலைக்கு சமீபமாகவுள்ள யாழ்.மாநகரசபை வளாகம் மற்றும் சுப்பிரமணியம் பூங்கா அமைந்துள்ள பகுதியில் படை முகாம் அமைக்கும் நோக்குடன் கடந்த சில தினங்களாகப் படையினர் அங்கு துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-10)

# மனித உரிமைகளுக்கான உபகுழுவின் உறுப்பினர்கள் குறித்து ஆட்சேபனை!

## அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்26

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் யாழ்.பிராந்தியத்திற்கென சிபார்சு செய்யப்பட்ட உபகுழுவின் நியமனத்தினை அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கடுமையாக ஆட்சேபித்துள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் மனித உரிமைகள் பாதுகாப்பிற்காக பிராந்திய மட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வலை அமைப்பிற்கான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

அக்கலந்துரையாடலிலேயே அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளால் இந்த ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மனிதநேய ஒன்றியத்தலைவர் சு.பரமநாதன், நீதிக்கும், சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் தலைவர் ஏ.ஐ.பேர்னாட், அகதிகள் புனர்வாழ்வு கழகத் தலைவர் ஏ.நல்லதம்பி, அரச சார்பற்ற நிறுவன உபதலைவர் வி.ஸ்ரீசுப்பிரமணியம், அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் எம்.கே.ஜீவகதாஸ் மற்றும் சர்வோதயப் பிரதிநிதிகள் ஆகியோர் அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பில் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர் அங்கு தெரிவித்ததாவது:-

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவில் நியமிக்கப்பட்ட உபகுழுவில் உள்ளவர்கள் அனைவரும் உயர்மட்டத்தினர். இவர்களுக்கான வேலைப்பளு அதிகம். இந்தச் சூழ்நிலையில் அவர்களால் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி செயற்படுவது கடினம். இதனை நிவர்த்தி செய்யும் முகமாக மக்களுடன் அடிமட்டத் தொடர்புகளை ஏற்படுத்தி செயற்படக்கூடிய அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை உள்ளடக்கக்கூடியதாக இந்த நியமனத்தினை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு வேண்டிய ஆளணி, உபகரணங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியன செய்து கொடுக்கப்படாமையினால் அவர்களால் மக்களுக்கு பூரண சேவையை வழங்க முடியாதுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக பல தடவைகள் விசாரணைகள் நடைபெற்றுள்ளன. ஆயினும் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை எமக்குப் பெரும் வேதனையளிக்கின்றது.

மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள - யாழ்நகரின் மத்தியிலுள்ள - இராணுவ முகாமை யாழ்.மாநகர சபையின் அனுமதி இன்றி மாநகர சபைக்குச் சொந்தமான சுப்பிரமணியம் பூங்காவில் அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் சென்று மீளக்குடியமர்வதற்கு உயர் பாதுகாப்பு வலயம் பெருந்தடையாக உள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் சென்று மீளக்குடியமரவிடாது தடுப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இதனை நிவர்த்தி செய்து மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு மனித உரிமை ஆணைக்குழு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்.குடாநாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடுகளைச் செய்வதற்கு உரிய அலுவலர்களை நியமிக்காமையினால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இது நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளதால் மாணவர்கள் மன அழுத்தத்துடனேயே பாடசாலைகளுக்குச் செல்லுகின்ற நிலைமை தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதனை நீக்கி மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை நெல்லியடி, மானிப்பாய் மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உதாசீனம் செய்யும் நடவடிக்கைகளாகவே உள்ளன. எனவே, எதிர்வரும் காலங்களில் இத்தகைய அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தவிர்த்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஓ-5)

# கல்விச்சாலைக் காட்சிகள்



அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டி இடம்பெற்றது. இதில் வினோத உடைப் போட்டியில் பங்கேற்ற மாணவரைப் படத்தில் காணலாம். *(அராலி செய்தியாளர்)*



நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டியின்போது பாடசாலை இசைக்குழுவின் அணிவகுப்பு மரியாதையை பிரத்ம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா, அதிபர் அருட்சகோதரர் எம்.தேவநேசம், யாழ். லூர்த்து மடத்துத் தலைவி அருட்சகோதரி ஆன்மாறி மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வி.இராஜலிங்கம் ஆகியோர் ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம் *(குருநகர் செய்தியாளர்)*



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன், அதிபர் சு.சண்முகக்குமார், சிறப்பு விருந்தினர் மு.நாகேந்திரராசா ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளும் காட்சி.



பருத்தித்துறை தட்டாதெரு மெதடிஸ்த மிசன் த.க.பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கிராம சேவையாளர் எஸ்.இரவிந்திரன் மாணவர் ஒருவருக்கு பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்:வடமராட்சி செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

புலோலியில் மந்திகைச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் வீதியில் மந்திகை வைத்தியசாலைக்கு கிழக்குப் புறமாக வீதியோரத்தில் அமைந்துள்ள நிலப்பரப்பு 15 குளி 15 விஸ்தீரணமுள்ள தோட்டநிலம் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு சு.செல்வராஜன், கொடிகாமம் வீதி, புலோலி. (சி-37098)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராயில் வீட்டுடன் கூடிய 8 பரப்புக் காணியும் மானிப்பாய் கட்டுடையில் வீட்டுடன் கூடிய 7 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: போதகர் இராஜசூரியர் T.P.:222 3204. (15969)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15588)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg 120/- சுத்தம செய்தல் இலவசம். மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். (15898)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg 125/- சுத்தம செய்து வேண்டிய நிறையில் பெற்றுக கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி T.P. 2867. (15952)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா பிரஜாவுரிமை உள்ள, 1973இல் பிறந்த, மிருகசீரிட நட்சத்திரம், 8இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். வி.இல.1827, மே/பா உதயன். (15936)

## மணமக்கள் தேவை

லண்டன், கனடா, சுவிஸ், ஜேர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்கள் உண்டு. அத்தோடு டாக்டர், பட்டதாரி, லிகிதர்கள் பொருளியலாளர், வர்த்தகர்கள், தனியார் நிறுவனங்களில வேலை புரியும் மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை. தொடர்பு: 298, கோயில் வீதி, நல்லூர் (கம்பன் கோட்டத்துக்கு அருகில்). (15967)

## மணமகன் தேவை

யாழ்.கிறிஸ்தவ கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த படித்த, அழகிய, 35 வயதுடைய மணமகளுக்கு மணமகன் தேவை. (சீதனம் வழங்கப்படும். ஜாதி, சமயம் கவனிக்கப்படமாட்டாது). தொடர்பு: விளம்பர இல. 1830, மே/பா உதயன். (15965)

கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 1975 இல் பிறந்த, மிருகசீரிடம 7இல் செவ்வாய், கிரகபாவம் 9 உடைய வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பெண்ணுக்கு அரசாங்கத் துறையில் அல்லது வெளிநாட்டில தொழில்புரிகின்ற மணமகன் தேவை. முழுவிவரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1829, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (15950)

நட்சத்திரம் உத்தரட்டாதி, 1ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய் உள்ள 1980 ஆம் ஆண்டு பிறந்த, மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: வி.இல.1826, மே/பா உதயன். (15918)

## மணமகள்கள் தேவை

1971, உத்தரம் 2ஆம் பாதம் செவவாய்க் குற்றமற்ற, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற டாக்டர் மணமகனுக்கும் 1977 கேட்டை 2இல் செவ்வாய் கொம்பியூட்டர் Dip. முடித்த கொழும்பு அரச வங்கியில் தொழில் புரியும் மணமகனுக்கும் வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமகள்கள தேவை. கமலக்கண்ணன் திருமண சேவை, 298, கோவில் வீதி, நல்லூர்.(15968)

## தவறிவிட்டது

24ஆம் திகதி திங்கட்கிழமை காலையில் கன்னாதிட்டி காளிகோயில் வாசலிலிருந்த கறுப்பு நிற கைப்பை தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அதனுள் சிமெந்துகூட்டுத் தாபன, தேசிய (இல.503452499V), விசேட அடையாள அட்டைகள், நாட்குறிப்பு என்பன உள்ளன. மாறி எடுத்தவர்கள் தயவுசெய்து கன்னாதிட்டியிலுள்ள சிமெந்துக் கூட்டுத் தாபனக் காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (15960)




(சி-37100)

நில்கமல் வழங்கும்
புத்தாண்டு விசேட வெகுமதி
Nilkamal



இலவசம்
6 கையுள்ள நாற்காலிகளை கொள்வனவு செய்து
நோவா ஸ்டூல்
ஒன்றை இலவசமாக பெறுங்கள்
இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
அனைத்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

யாழ். விநியோகஸ்தர்
அம்பிகை களஞ்சியம்
41, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2222511

Nilkamal Eswaran plastics (Pvt) Ltd.
329, Madapatha Road,
Balaketthara, Piliyandala,
Tel:074-215268,074-212661-3, Fax:074-215267
E-mail: mktnilkamal@eureka.lk

(சி-27002)

Newdale®

நியூடேல் யோகட்
நியூடேல் சுவையூட்டிய பால்

இப்போது யாழ்ப்பாணத்திலும் வாங்கலாம்

உங்கள் அபிமானத்திற்குரிய நியூடேல் யோகட்டும் வனிலா, சொக்லெட் ஆகிய சுவைகளில் வழங்கப்படும் நியூடேல் பாலும் இப்போது யாழ்ப்பாணத்திலும் தாராளமாகக் கிடைக்கின்றன என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

நியூடேல் உற்பத்திகள் புதுச்சுவை குன்றாத தூய பசுப்பாலில் இருந்து மிகச் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுவதால் தரமுயர்ந்தவை. சத்தும் சுவையும் நிறைந்தவை. நாடெங்கும் சிறியோர், பெரியோர் அனைவரும் விரும்பி நாடும் அவற்றை நீங்களும் சுவைத்து மகிழுங்கள்.

(சி-27003)

நியூடேல் - இன்சுவை நிறைந்த போஷாக்கு

# ஈராக் போரைக் கண்டித்து இன்று அம்பாறை மாவட்டத்தில் துக்கதினம்

## கல்முனையில் அமெரிக்க எதிர்ப்புக் கூட்டம்

கல்முனை,மார்ச்26

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகளின் ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போரைக் கண்டித்து, இன்று புதன்கிழமை அம்பாறை மாவட்டத்தில துக்கதினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள அரச திணைகளங்கள், காரியாலயங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் இன்று முழுமையாக மூடிவிட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறு "அம்பாறை மாவட்ட முஸ்லிம் வெகுஜன ஒன்றியம்" துண்டுப் பிரசுரம் மூலம் அழைப்பு விடுத்துள்ளது.

இன்று நண்பகல் லுஹர் தொழுகையின் பின்னர் அனைத்துப் பள்ளிவாசல்களிலும் ஈராக் மக்களுக்காக துஆப் பிரார்த்தனைகளை நடத்துமாறு பள்ளிவாசல் நிர்வாகிகளையும், உலமாக்களையும் இந்த அமைப்பு கேட்டுள்ளது.

இதேவேளை, இன்று மாலை கல்முனை ஸாஹிராக் கல்லூரி வீதியல் அமைந்துள்ள மர்ஹூம் மீராமுகைதீன் பவுண்டேஷன் நூலக முற்ற வெளியில் அமெரிக்க எதிர்ப்புக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது. இதனை கல்முனை அல்பதாஹ் சமூக சேவை ஒன்றியம் ஏற்பாடுசெய்துள்ளது. (ம)

# பதவி உயர்வு வழங்கப்படாத கிராம அலுவலர்கள் விவரம்

## விசாரணைக்காக சேகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்26

1997ஆம் ஆண்டு மேமாதம் 26ஆம் திகதி நடைபெற்ற கிராம அலுவலர் அதிசிறப்புத் தரத்துக்கான பதவி உயர்வுக்குரிய போட்டிப் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தோற்றிய கிராம அலுவலர்களில் 90 புள்ளிகளுக்கு மேல் பெற்றோரின் பரீட்சை பெறுபேற்று சான்றிதழை யாழ். மாவட்ட கிராம அலுவலர் நலன்புரிச் சங்கம் சேகரித்துவருகிறது.

மேற்படி பரீட்சையில் தோற்றிய தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகளுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமையை ஆட்சேபித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டிருக்கிறது. இதுதொடர்பான விசாரணைகள் கொழும்பில் நடைபெற்று வருகின்றன.

90 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் பெறுபேறுகளை விசாரணைக்காக சமர்ப்பிக்க வேண்டி இருப்பதால பெறுபேற்று சான்றிதழின் பிரதி ஒன்றை நல்லூர் - பருத்தித்துறை வீதியில் 251/1 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட கிராம அலுவலர் நலன்புரிச் சங்க அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டிருக்கிறார். (ஐ)

# பளையில் குடும்பஸ்தர் வாகன விபத்தில் பலி!

யாழ்ப்பாணம்,மார்ச்26

பளை, தர்மக்கேணி பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் வடமராட்சி கிழக்கு ஆழியவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தரும் வழியிலேயே வாகன விபத்தில் சிக்கினார் என்று கூறப்படுகிறது.

வேல்நாயகம் வேலையா (வயது50) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரை மோதிய வாகனம் தப்பி ஓடிமறைந்துவிட்டது.

கிளிநொச்சியில் தமிழீழ மாவட்ட நீதியாளர் தமிழரசன் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டார். இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை தமிழீழப் பொலீஸா மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

# தந்தை செல்வா நினைவு தினம்

யாழ்ப்பாணம்,மார்ச்26

தந்தை செல்வாவின் 105ஆவது பிறந்தநாள் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் எதிர்வரும் 31ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.நகரில் உள்ள செல்வா நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவல் குழுத் தலைவரான தென் இந்தியத் திருச்சபையின் பேராயர் எஸ்.ஜெபநேசன் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெறும். அங்கு சர்வமதப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது.

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி தேவாலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு நினைவுச் சொற்பொழிவு இடம் பெறும். (ஐ-9)



## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

புங்குடுதீவு கலட்டி
வரசித்தி விநாயகர் ஆலயம்

நாளை (27.03.2003) வியாழக்கிழமை
காலை 8.00 மணி முதல் 9.00 மண வரை
பாலஸ்தாபனம் நடைபெறும்.
அத்தருணம் அடியார்கள் யாவரும வருலகதந்து
எம்பெருமானின் இன்னருளைப் பெற்றேகுமாறு
வேண்டுகின்றோம்.

ஆலய அறங்காவலர் சபையினர்.
புங்குடுதீவு. (15990)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1945 - 03 - 29



மறைவு 2000 - 03 - 28

அமரர் மு. மதுரைவீரன்

திதி: 26.03.2003 நவமி

என்னை விட்டு நீர்பிரிந்து ஆண்டு மூன்றாச்சு
என்றும் உங்கள் நினைவேயென் நெஞ்சின் நிழலாச்சு.

இல.09,கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (15985)

என்றும் உம் நினைவுடன்,
பார்வதி (மனைவி).

# வளர்மதி வி.க. முன்னணியில்

தென்மராட்சி,மார்ச்26

தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட குழுநிலைப் போட்டிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தினர் முதலிடங்களைப் பெற்று முன்னணியில் உள்ளனர்.

ஆண்களுக்கான கிரிக்கெட், பெண்களுக்கான கிரிக்கெட், கரப்பந்தாட்டம் ஆகியவற்றில் முதலிடத்தைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# வலி.வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்26

வலி.வடக்குப் பிரிவு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சமாசக் கூட்டம், நாளை வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலி.வடக்குப் பிரிவு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா கேட்டுள்ளார். (ஒ-8)

# நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்26

விரிவுரையாளர் மலர் சின்னையாவின் 'விழித்தெழுவோம்', 'சிந்தனைத துளிகள்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்க திட்டப் பணிப்பாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

நூல்களை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராஜா நிகழ்த்துவார்.

ஆய்வுரைகளை வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.இளங்குமரன் ஆகியோர் வழங்குவர்.

மதிப்புரையை யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார். (ஐ-6)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்26

புங்குடுதீவு வரசித்திவிநாயகா ஆலய வருடாந்த பாலஸ்தாபன விழா, நாளை வியாழக்கிழமை இடம்பெறவுளளது. (ம-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்26

யாழ்.கொட்டடி ஆஸ்பத்திரி வீதி, பூரண புட்கலைவாச மேத ஹரிகர புத்திரேஸ்வரர் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 6.14 மணிக்கு நடைபெறும்.

அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும். (ம-15)


தேவை
வேலையாள்கள் தேவை.
நேரில் வரவும்.
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(15987)

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ரீமாசென், வடிவேல்
பகவதி
10.30, 2.30, 6.30 மட்டும்
RUSH HOUR 2
24 வரை - இரவு 9.30 இற்கு மட்டும்.

நிறைஞ்சனாஸ்
சத்தியராஜ், சுவலட்சுமி நடித்த
ஆண்டான் அடிமை
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்கு
HOLLOW MAN

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா,
விஜூச்சக்கரவர்த்தி, சுபாஷி நடித்த
சொக்கத்தங்கம்
(இனிய பாடல்கள் நிறைந்த திரைப்படம்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00மணி (பு.நேரம)


## ஆனையிறவு வெற்றிக்கு வழிகோலிய

# குடாரப்பு தரையிறக்கம்; நினைவுக்கல் இன்று திறப்பு

வடமராட்சி கிழக்கு,மார்ச்26

ஆனையிறவு படைமுகாமை தாக்கி அழிப்பதற்கு வழிசமைத்த வரலாற்றுப் புகழ் படைத்த குடாரப்பு தரையிறக்க சம்பவத்தின் நினைவுக்கல் திறப்பு விழா, இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு வடமராட்சி கிழக்கு குடாரப்பில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். படையணிகளின் கலை நிகழ்வுகள், இசை நிகழ்வுகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வை ஒட்டி மருதங்கேணிப பிரதேசம் அலங்கார வளைவுகள், கொடிகள் ஆகியவற்றினால் அலங்கரிக்கப்பட்டு எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி இரவு கடற்புலிகளின் சுமார் 1,200 போராளிகள் விசைப் படகுகள் மூலம் குடாரப்பில் தரையிறக்கப்பட்டு ஆனையிறவு படைமுகாமை நோக்கி முன்னேறிச் சென்றனர். இந்த அணியினர் இயக்கச்சியிலிருந்து ஆனையிறவுக்கான விநியோகங்களைத் துண்டித்தனர், (ம-182)

# பொலீஸ் காவலில் இருந்தபோது தாக்கப்பட்டதாகக் கூறி மனு

## சந்தேகநபர் மருத்துவப் பரிசோதனைக்கு

பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் தாக்கப்பட்டு காயமடைந்ததாக சந்தேக நபர் ஒருவர் தெரிவித்ததையடுத்து, அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்தார் எனக் கூறப்படும் பண்டத்தரிப்பைச் சேர்ந்த பிலிப் ஜோசப் என்பவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் இளவாலைப் பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் ஆஜராகத் தவறிய பிரஸ்தாப நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் பிடியாணை பிறப்பித்திருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரஸ்தாப நபரைக் கைதுசெய்த பொலீஸார், மறுநாள் சனிக்கிழமை நீதிமன்றத்தில் அவரை ஆஜர் செய்தனர்.

பொலீஸார் தன்னைக் கைது செய்த பின்னர் தாக்கியதில் உடலில் நோ ஏற்பட்டிருப்பதாகவும் -

தன்னை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த அனுமதிக்க வேண்டும் என்றும் கோரி சந்தேக நபர் சார்பில் மனு ஒன்று நேற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபரை யாழ். சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் சுப்பிரமணியம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் சுப்பிரமணியம் நேற்று (25.03.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் செல்வராணி, புஸ்பராணி, பத்மநாதன் (சுவிஸ்), தங்கராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராசரத்தினம், தேவபாலன் (ஹொலண்ட்), விஜயலக்சுமி (சுவிஸ்), ஸ்ரீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கனகர், இராசரத்தினம் மற்றும் இராசதுரை, முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரனும சதீஸ்குமார், ஊர்மிளா, கங்கைஅமரன், சுகந்தினி, ரமேஷினி, ரஜிதா, அபிராமி, ரஜீவன், கஜரஜன், கஜானன், விஜூஜா, பானுசங்கர், அனுசியன், அபிசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.03.2003) புதன்கிழமை நண்பகல் 12.00மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சு.பத்மநாதன் (மகன்)
T.P.0628221217

இணுவில் மேற்கு. (15989)

## பாலசுப்பிரமணியம் பிரதீபன்

அல்லாரை வடக்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பிரதீபன் 16.03.2003 ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - யோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் பிரகாந்தின் அன்புச் சகோதரனும் திருமதி வினாசி செல்லியின் அன்புப் பேரனும் பாலசுந்தரம்- தவமலர் (சுவிஸ்), பாலமோகன் ஆகியோரின் மருமகனும் சிவராசா - இந்திராதேவி (ஜேர்மனி), மரியதாஸ் - ரஞ்சினி (சுவிஸ்), மோகனசெல்வம், நிர்மலா, தவரெத்தினம் - சந்திரா ஆகியோரின் பெறாமகனும் மினுஜா, துஜிதா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் கெவின், கஸ்தூரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2003) புதன்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தவரெத்தினம், மோகனசெல்வம்.
(சிறிய தந்தையர்)

அல்லாரை வடக்கு,
கொடிகாமம். (15986)

## திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் குவாந்தன், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா அவர்கள் மலேசியாவில் 24.03.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தங்கோடை, காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தில்லைநாதர் (CTB) மற்றும் மகேஸ்வரி, தபோமணி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணி, கந்தப்பிள்ளை, காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் மைத்துனியும் பத்மாவதி, சரஸ்வதி, கமலம், லீலா, உமாதேவன், சகாதேவன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.கந்தப்பிள்ளை
(மைத்துனர்)

நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய். (15984)

தரையில் கெரில்லாத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலை

# கூட்டுப்படைகளுக்கு பின்னடைவு ஒப்புக்கொள்கின்றார் அமைச்சர்

## 7,500 கோடி டொலர் நிதிகோரி அதிபர் புஷ் போர் பட்ஜெட்

தரை மூலம் ஈராக் தலைநகர் பக்தாத் உள்ளே செல்ல முனையும் கூட்டுப்படைகள் மீது ஈராக் படைகள் கடும் கெரில்லாத் தாக்குதல் தொடுத்துள்ளன. ஈடுகொடுத்து ஊடுருவ முடியவில்லை. தமது படைகளுக்குப் பின்னடைவு என்பதை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஒப்புக் கொண்டார்.

அதேவேளை, 7,500 கோடி டொலர் நிதிகோரி போர் பட்ஜட் ஒன்றை புஷ் அரசு அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறது.

ஈராக் தலைநகரான பக்தாத்தை அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுத் தரைப் படைகள், ஈராக் படைகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் தென்திசையில் 70 கிலோ மீற்றர் தூரத்தில் நெருங்கிவிட்டன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. கூட்டுப் படைகள் பக்தாத்தை நோக்கி முன்னேறி வருகின்ற போதிலும் இரசாயன ஆயுதத் தாக்குதல், பாலைவன புழுதிப் புயல் என்பன அப்படைகளை பீதி கொள்ளச் செய்திருக்கின்றன. ஈராக் படைகளின் கெரில்லாத் தாக்குதல்களும் கூட்டுப் படைகளை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கி வருகின்றன.

கூட்டுத் தரைப்படைகள் மேலும் முன்னேற முடியாதிருக்கும் அதே வேளை - அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் பக்தாத் நகரிலுள்ள முக்கிய நிலைகளை இரவு - பகலாகத் தொடர்ந்து தாக்கி வருகின்றன. நேற்றுமுன்தினம் மட்டும் இந்த போர் விமானங்கள் பக்தாத் நகரம் மீது 1500 தடவைகள் பறந்து சென்று குண்டுகளைப் பொழிந்தன. இதனால் நகரமே அதிர்ந்தது.

அமெரிக்க - பிரிட்டிஷ் போர் விமானங்களின் இதுவரையிலான தாக்குதல்களில் பக்தாத்தில் 194 பேர் உட்பட 300 இற்கு மேற்பட்ட அப்பாவி ஈராக் மக்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஏராளமானோர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி சதாம் ஹுசைனின் விசேட படையணியான குடியரசு காவல் படையினர் மூர்க்கமாகப் போராடி பக்தாத் நகரைப் பாதுகாத்து வருகின்றனர். கூட்டுப்படைகள் மீது அவர்கள் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். அதனால், குடியரசு காவல் படையை இலக்கு வைத்து அமெரிக்கப் போர் விமானங்களும் ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டிருக்கின்றன.

நேற்று ஆறாவது நாளாக ஈராக் போர் தொடர்ந்தது. ஈராக் படைகள் கடந்த மூன்று தினங்களாக காட்டி வரும் பலத்த எதிர்ப்பினால் தென் பகுதி ஈராக் நகரங்களான பஸ்ரா, நஸ்ரியா ஆகியவற்றை கூட்டுப்படைகள் இன்னமும் கைப்பற்ற முடியாதிருக்கிறது.



பஸ்ராவில் காட்டப்படும் பலத்த எதிர்ப்பால் பிரிட்டிஷ் படைகள் நேற்று அங்கிருந்து வெளியேறவேண்டியதாயிற்று. வெளியேறிய படைகள் மீண்டும் ஒன்று சேர்ந்து வருகின்றன என்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் கூறினர்.

பஸ்ராவில் பலத்த எதிர்ப்பு

பஸ்ராவிலுள்ள ஈராக் படைகளின் பலத்தையும் பஸ்ரா மக்கள், ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீது கொண்டுள்ள விசுவாசத்தையும் தாங்கள் குறைத்து மதிப்பிட்டுவிட்டதை பிரிட்டிஷ் இராணு அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

பஸ்ராவுக்கு வெளியிலும் துறைமுக நகரான உம்கஸ்ஸரிலும் காட்டப்படும் ஈராக் எதிர்ப்பை அடக்குவதில் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் பெரும் சிரமப்படுகின்றன. அப்பிராந்தியத்தில் ஒடுக்குமுறைக்குள்ளான பெரும்பான்மை சிஹரிட்டி முஸ்லிம்கள் சதாம் ஆட்சி ஒழிக்கப்படுவதை வரவேற்பார்கள் என்று இராணுவ அதிகாரிகள் நம்பினர். இதனால், சிறிதளவு எதிர்ப்பே இருக்கும் என எதிர்பார்த்தனர்.

பொதுமக்கள் உடையிலான கெரில்லாக்களின் தாக்குதல்களையும் மோட்டார் தாக்குதல்களையும் அடுத்தே பஸ்ராவிலிருந்து பிரிட்டிஷ் படையணி வெளியேறியுள்ளது. ஒரு கட்டத்தில் இப்படையணி பஸ்ரா நகரை சுற்றி வளைத்திருந்தது.

நஸ்ரியாவிலும் திண்டாட்டம்

மற்றோர் ஈராக் நகரான நஸ்ரியாவைக் கைப்பற்றுவதிலும் அமெரிக்கப் படைகள் திண்டாடி வருகின்றன. 4,000 முதல் 5,000 வரையிலான அமெரிக்க கடற்படையினர் அங்கு சண்டையில் ஈடுபடுத்தப்பட்டனர். நேற்று அப்படையினர் புதிய தாக்குதலை ஆரம்பித்தனர்.

இத்தாக்குதலில் எண்ணிக்கை தெரியாத வீரர்கள் இறந்து அல்லது காணாமற்போயிருக்கின்றனர். வேறு பலர் ஈராக் படையினரால் சிறைபிடிக்கப்பட்டனர். நஸ்ரியா நகரிலும் அதற்கு வெளியிலும் நடைபெற்ற சண்டையில் 10 இற்கு குறைவான படையினர் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்க தளபதிகள் கூறினர். ஏனையோர் காயமடைந்தனர். ஒரு டசின் பேர் காணமற போயினர்.

ஆனால், இந்த எண்ணிக்கை இதனை விடக் கூடுதலானது என்று பெயர் குறிப்பிடவிரும்பாத ஒரு வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இதுவரையிலான சண்டைகளில் 3,000 ஈராக் வீரர்களைச் சிறைப் பிடித்திருப்பதாக அமெரிக்க தளபதி ஜெனரல் டொமி பிராங் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## அளவுக்கதிகமானோருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயலத் ஜயவர்த்தனவும், சர்வதேச தொண்டு நிறுவனததின் மேலதிகாரி ஒருவரும் வந்திறங்கினர். ஏற்கனவே கொழும்பில் இருந்து தாம் புறப்பட்ட சமயமே தொலைபேசி மூலம் பயணச் சீட்டுக்கான பதிவை சம்பந்தப்பட்ட விமான சேவை நிறுவ னத்துடன் தாம் செய்துகொண்டிருந்ததாக அவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனால், அமைச்சருக்கும் அவரோடு வந்த மற்றப் பிரமுகருக்கும் எப்படியாவது இடமளித்து அவர்களை விமானத்தில் அனுப்பிவைக்க விமான சேவை நிறுவனத்தினர் முயன்றனர். விமானத்தில் ஏறுவதற்கான அனுமதி அட்டையை ஏற்கனவே பெற்றுக் கொண்டிருந்த - கடைசியாக வந்து பயணச்சீட்டுக் கொள்வனவு செய்த - இருவரை நேற்றைய பயணத்தைக் கைவிட்டு விமானத்தைவிட்டு இறங்கித் திரும்பிச் செல்லும்படி அவர்கள் கோரினர். அதற்கு சம்பந்தப்பட்ட இரு பயணிகளும் மறுத்ததை அடுத்து பெரும் சர்ச்சையும் வாக்கு வாதமும் ஏற்பட்டது. விமானத்தின் விமானிகளில் ஒருவர் அங்கு வந்து அந்தப் பயணிகள் இருவரையும் தாறுமாறாகத் திட்டி கேவலப்படுத்தியதாகவும் கூறப்பட்டது. இதனால், ஏனைய பயணிகள் மத்தியில் அதிருப்தியும், குழப்பமும், விசனமும் ஏற்பட்டன.

இறுதியில் அந்தப் பயணிகள் இருவரையும் இறக்கி விட்டுவிட்டு அமைச்சரையும் மற்றப் பிரமுகரையும் ஏற்றிக்கொண்டு மாலை 6.45 மணியளவில் - சுமார் 1 மணித்தியாலம் 45 நிமிட நேர தாமதத்தின் பின் - விமானம் இரத்மலானைக்குப் புறப்பட்டது.

விமானம் இரத்மலானையில் தரையிறங்கிய பின்னர் அதன் ஏனைய பயணிகளுக்கு தனதுபக்கக் கருத்துக்களை அமைச்சர் ஜயலத் எடுத்துரைத்தார்.

சம்பந்தப்பட்ட விமான நிறுவனத்தின் மூத்த அதிகாரியின் பிரசன்னத்தில் பயணிகளுடன் உரையாடிய அமைச்சர் நேரத்துடன் தாம் செய்துகொண்ட விமானப் பதிவைக் கவனத்தில் எடுப்பதில் பயண நிறுவன அதிகாரிகள் தவறிவிட்டதே இக்குழப்பத்துக்குக் காரணம் என்று கூறினார். அதனை விமான சேவை நிறுவன மூத்த அதிகாரியும் ஒப்புக்கொண்டார். (ஐ-உ)

## செய்தியாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படி செய்தியாளர்கள் உரிய நேரத்துக்கு நூலகத்திற்குச் சென்றுவிட்டனர். எனினும், அமைச்சர் அங்கு வரவில்லை. அவரை எதிர்பார்த்து செய்தியாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தனர்.

அந்த செய்தியாளர் மாநாடு ரத்து செய்யப்பட்டுள்ளதாக செய்தியாளர்களுக்கு ஒரு மணிநேரத்தின் பின் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த 20 செய்தியாளர்களை அடங்கிய குழுவினரை அமைச்சர் ஜயலத் வேறு ஓர் இடத்தில் சந்தித்து பேட்டி அளித்தார் என தெரிய வந்தது. (ஐ-3-10)

## வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது என்பது இந்த வழக்கைப் பொறுத்தவரை ஒரு தேசிய சாபக்கேடு.

தனிப்பட்ட சிலபேருக்கு தமது வீடுகளில் வாக்களிக்க அனுமதி அளித்துவிட்டு, 55 ஆயிரம் பேரை வாக்களிக்க விடாமல் தடுத்தமையால் தனி மனிதனின் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவை மீறப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி.சில்வா, தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி சண்முகம், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல உட்பட 23 பேர் எதிர் மனுத்தாரர்களாக மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க, முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஆகியோர் கடந்த பொதுத்தேர்தலின் போது தமது வீடுகளில் இருந்தே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## தலையிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வான்வழிக் குண்டுத்தாக்குதலால் தகர்ந்து சிதிலமாகியது. அதனால் மாநகரசபை நல்லூரில் அது தற்போது இயங்கும் இடத்துக்கு மாற்றப்பட்டது.

இந்தக் கட்டடத்தை மீளக்கட்டியெழுப்புவது என யாழ்.மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பிரதேசத்தில் புதிதாக இராணுவமுகாம் அமைப்பது புரிந்துணர்வு உடன்பாட்டு ஏற்பாடுகளுக்கும் முரணானது என்பதைச சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜனநெருக்கடி மிக்க யாழ்நகரின் மத்தியில் உள்ள இந்தப் பிரதேசத்தில் முகாம் அமைப்பது மக்களுக்கு மிகுந்த அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்பதும் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியதொன்றல்ல.

- இப்படி அந்தக் கடிதத்தில் மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ, வடக்கு - கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் எஸ். தங்கராஜன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-உ-3)

## சீன நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தன.

நேற்று நண்பகல் இச் சடலங்களை யாழ்.ஆஸ்பத்திரியிலிருந்து பொறுப்பேற்ற கடற்படையினர், அவற்றை கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தனர்.

இச்சடலங்கள் நேற்றிரவே சீன தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட இருந்தன. (ஐ-3-10-15-139)

## அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஜப்பானில் நடைபெறும்போது இலங்கைக்குத் தாராள நிதி உதவிகள் கிடைக்குமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ-3)

## பெரும் இராணுவத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

யாழ்.முதலாம் குறுக்கு வீதியில் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மேற்கொண்டு வந்த ஐஸ்கட்டி உற்பத்தித் தொழிற்சாலையின புனரமைப்புப் பணியை இடைநடுவில் நிறுத்துமாறு படைத்தரப்பு பணித்திருக்கிறது. அந்தப் பிரதேசத்தையும் உள்ளடக்கி படைமுகாமை நிறுவுவதற்கான பின்னணியிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பொது அமைப்புக்கள் சந்தேகம் கொண்டுள்ளன.

படையினரின் இந்த முயற்சி தொடர்பாக நேற்று மாலை யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடத்தப்பட்ட ஒரு கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

மனித நேய அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள் உட்பட பலரும் அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

யாழ்நகரின் கரையோரப் பகுதியில மாநகர சபைக்குச் சொந்தமான அரச காணிகளை படையினர் சுவீகரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு, அமைச்சரவை, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ஆகிய தரப்புகள் அங்கீகாரம் அளித்துள்ளன. யாழ்நகரின் கரையோரப் பகுதியில் பெரிய அளவிலான படைமுகாமை அமைப்பதற்கு படைத்தரப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கரையோரப் பிரதேசங்களில் படையினர் முழுமையான முகாம் ஒன்றை அமைப்பதானது, மக்களின் இயல்பு வாழ்க்கையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும். அத்துடன், அது புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்து 1.5 ஐ மீறுவதாகவும் அமைகிறது. இப்பகுதியில் இரண்டு பிரபல பாடசாலைகள், இந்து மற்றும் கிறீஸ்தவ ஆலயங்கள், நூல் நிலையம், விளையாட்டு மைதானம் போன்றன காணப்படுகின்றன. இவற்றுக்கு அருகில் இராணுவ நிலைகளை அமைப்பது பொது மக்களின் இயல்பு வாழ்க்கையில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன், அவை மனித உரிமை மீறலும் ஆகும். நகரின் ஒரேயொரு பொழுது போக்கு இடமான சுப்பிரமணியம் பூங்காவை படைத்தரப்பு சுவீகரிக்க இருப்பதை அடுத்து அங்கு 'யுனிசெவ்' அமைப்பு மேற்கொண்டுவந்த புனரமைப்பு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. படைத்தரப்பின் இச்செயல் சிறுவர் தொடர்பான உரிமைகளையும் மீறுவதாக உள்ளது. - இவ்வாறு கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பான கண்டன நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கென ஏழு பேர் கொண்ட செயற்பாட்டுக் குழு ஒன்று அங்கு தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மனித நேய அமைப்புகளைச் சேர்ந்த அருட்தந்தை பேர்னாட் அடிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சுப்ரமநாதன், வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.சபாரட்ணம், யாழ்.முஸ்லிம்கள் அமைப்பைச் சேர்ந்த முபீன், தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலர் தபஞ்சலிங்கம் மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு சகல தமிழ நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்வதெனவும் நேற்றைய கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. யாழ்நகரின் கரையோரக் காணிகளைப் படையினர் சுவீகரிப்பதை உடன் நிறுத்துமாறு கோரி பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், யுத்த நிறுத்தக் கணிகாணிப்புக் குழுவின் தலைவர், மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அவசர செய்திகளை அனுப்பவும் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. (ஐ-9)


கணனிப்புல வலுவூட்டல் அலகு

யாழ்.கம்பர்மலை அ.த.க.பாடசாலை, பழைய மாணவர் சங்க கனடாக்கிளைச் சங்க அனுசரணையுடன்

மென்பொருள் கணனிச் செயல்நெறிக் கற்கைநெறி

ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக்கற்கைநெறியினைப் போதிப்பதற்குத் தகுதியுடைய கணனி விரிவுரையாளர்கள், கணனி பயிற்றுவிப்பாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு:
கணனிப்புல வலுவூட்டல் அலகு,
பழைய மாணவர் சங்கம்,
யா/கம்பர்மலை அ.த.க.பாடசாலை,
வல்வெட்டித்துறை. T.P.0777- 132492. (15970)



LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு:
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்.
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/27007)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பிபற்றது.